Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

பொதுசன நூலகம்

WESTERN UNION® பணப் பரிமாற்றம்

மூலம் உலகின் எப்பாகத்தில் இருந்தும் பணத்தை விரைவாக பெற்றுக்கொள்ள நல்லூரில்...

சந்தியா மல்ரி கோட்யாட்

531, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆடி 07 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.ஆகிர் 03 (22.07.2004) வியாழக்கிழமை இதழ்:293

# அதிகரிக்கும் போர் நெருக்கடியைத் தணிக்க

# கிளிநொச்சி விரைந்தார் புறாவ் ஹொவ்டே!

## தமிழ்ச்செல்வனுடன் இன்று முக்கிய சந்திப்பு

(கிளிநொச்சி)

**போர்நிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்தும் பேணுவதில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலைமை குறித்து விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் பேச்சுக்களை நடத்துவதற்காக இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ட்றொன்ட் புறாவ் ஹொவ்டே நேற்று மாலை கிளிநொச்சிக்கு விஜயம் செய்தார்.**

நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் இலங்கை விமானப்படையின் உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சி மத்திய விளையாட்டுமைதானத்தில் இவர் வந்தடைந்தார்.

இவர் இன்று காலை 8.00 மணிக்கு சமாதான செயலகத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளார்.

இந்தச் சந்திப்பில் கிழக்கு மாகாணத்தில் படைத்தரப்புடனான சந்திப்புக்களில் இருந்து புலிகள் விலகிக் கொண்டதால் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலை, கிழக்கில் அதிகரித்து வரும் கொலைச் சம்பவங்கள், கட்டுப்படுத்த முடியாத நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் போர்நிறுத்த மீறல்கள் மற்றும் பல் வேறு விடயங்கள் குறித்தும் விரிவாக ஆராயப்படவுள்ளது.

யுத்தநிறுத்த மீறல் சம்பவங்கள் மற்றும் அதிகரித்து வரும் போர் நெருக்கடிகள் குறித்துப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ட்றொன்ட் புறா

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரச மற்றும் புலிகளின் சமாதான செயலகங்களின் பணிப்பாளர்கள் சந்திப்பு!

(கிளிநொச்சி)

அரசாங்கத்தின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜெயந்த தனபாலவும், விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவனும் சந்தித்து, தற்போதைய சமாதான முயற்சிகள் குறித்து கலந்துரையாடல் நடத்தினார்.

பேச்சுவார்த்தை முறிந்து போன பின்னர், உயர்மட்டத்தில் நடைபெற்ற இரு பகுதிக்குமிடையிலான இச்சந்திப்பிற்கு ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்துள்ள போதிலும், இது ஒரு பரஸ்பர சந்திப்பு மட்டுமே என்று அரசாங்கப் பேச்சாளர் ஜெயந்த தனபால தெரிவித்தார்.

இந்த வார இறுதியில் கொழும்பிற்கு வருகை தரவுள்ள நோர்வே தரப்பினர், கிளிநொச்சி சென்று முக்கிய பேச்சுக்களை (12 ஆம் பக்கம் பார்க்க)

## தேங்கிக்கிடந்த தபால் பொதிகள் விமானம் மூலம் எடுத்துவரப்படும்!

(கொழும்பு)

கடந்த 10 மாதங்களுக்கும் மேலாக வவுனியாவில் தேங்கிக் கிடந்த இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட யாழ்.மாவட்டத்திற்குரிய தபால் பொதிகள் விமானம் மூலம் அனுப்பிவைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிசோர் நேற்று முன்தினம் தபால் தொடர்புத்துறை அமைச்சருடன் இவ்வாறு தேங்கிக் கிடக்கும் தபால் பொதிகள் குறித்துப்பேசியதையடுத்து அவற்றை விமானம் மூலம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அங்கு தேங்கிக்கிடந்த தபால் பொதிகள் நேற்று இரண்டு லொறி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜூலை கலவரம் நினைவாக ஞாயிறன்று பூரண துக்கதினம்!

### அனைத்துப் பணிகளையும் இடைநிறுத்தக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழர்களின் வாழ்வை வேரோடு பிடுங்கி எறிய சிங்களப் பேரினவாதிகளால் முன்னெடுக்கப்பட்ட 1983 ஜூலைக் கலவர நினைவுதினமான எதிர்வரும் 25 ஆம் திகதியை - முழுமையான துக்கதினமாக அனுஷ்டிக்குமாறும் -

அன்றைய தினம் வர்த்தக மற்றும் போக்குவரத்து சேவைகளை முற்றாக நிறுத்தி ஒத்துழைக்குமாறு யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் -

வன்முறையை கட்டவிழ்த்து தமிழர்களது உயிரை உடமைகளை அழிப்பதன் மூலம் தமிழர்களை பயமுறுத்தி பணிய வைக்கலாம் என்ற தென்னிலங்கை ஆட்சியாளர்களின் வெளிப்பாடுகள் 83 ஆடிக் கலவரமாகும்.

ஆனால் - எண்ணிலடங்காத அனைத்து தமிழ் மக்களும் ஒன்றுபட்டு உழைக்க எதிரி எமக்கு உருக் கொடுத்த கறுப்பு ஜூலையைதமிழ்த் தேசியத்தின் எழுச்சிக்கான

(12 ஆம் பக்கம் பார்க்க)

## உதவிவழங்கும் நாடுகளின் நிலைப்பாடு தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாம்!

## ஈ.பி.டி.பியின் அம்பாறை மாவட்ட

# தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாம்!

## ஹெல உறுமய எம்.பி நாடாளுமன்றில் முழக்கம்

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தாலேயே இலங்கைக்கு உதவி வழங்கமுடியுமென உதவி வழங்கும் நாடுகள் கொண்டிருக்கும் இறுக்கமான நிலைப்பாடு, நாட்டில் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது என ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் சங்கைக்குரிய ரத்னதேரர் தெரிவித்தார்.

நாடாளுமன்றில நேற்று அவர் உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

தகுந்த தேசியப் பொருளாதாரக் கொள்கை ஒன்றை வகுப்பது அரசின் மிக முக்கிய பொறுப்பாகும். இது தொடர்பாக ஜாதிக ஹெல உறுமய அரசாங்கத்துடன் பயனுள்ள பேசசுக்களை நடத்தத் தீர்மானித்துள்ளது.

முன்னைய அரசாங்கத்தின் இலங்கையை மீட்டெடுக்கும் திட்டம் மூலமாக இலங்கையின் வளங்கள் படிப்படியாக மேல் நாட்டவர்களுக்குச் சொந்தமாக்கப்பட்டு வருகின்றது. இந்த விடயம் தொடர்பாக நாடாளுமன்றில் விவாதமொன்றை நடத்தவேண்டும்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஈ.பி.டி.பியின் அம்பாறை மாவட்ட பிரதி அமைப்பாளர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

ஈ.பி.டி.பியின் அம்பாறை மாவட்ட பிரதி அமைப்பாளரான கமலன் எனப்படும் வேலாயுதம் ரவீந்திரன் என்பவர் அக்கரைப்பற்று தனியார் பஸ நிலையத்தில் வைத்து நேற்று இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பிரதேச சபையின் தலைவரும், ஈ.பி.டி.பியின் அம்பாறை பிரதி அமைப்பாளருமான இவர் உள்ளூராட்சிமன்ற வாரத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட சிரமதான நிகழ்வில் கலந்துகொண்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று பிற்பகல் 2.05 மணியளவில் சைக்கிளில் வந்த ஆயுததாரிகள் இவர்மீது ஆறு தடவைகள் துப்பாக்கிப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்மக்களை மதரீதியில் பிளவுபடுத்த முனையும் சக்திகளைத் தோற்கடிப்போம்

## அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

தமிழ்த் தேசிய இனத்தை மதரீதியாகப் பிளவுபடுத்தும் சக்திகளை இனங்கண்டு, அதனை முறியடிக்க அனைத்துத் தமிழ் பேசும் மக்களும் முன்வரவேண்டுமென தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழச்செல்வன் தெரிவித்தார்.

மன்னார் ஆண்டான்குளம் தமிழ்க் கலவன் பாடசாலையில் நேற்றுக் காலை நடைபெற்ற மும்மதம் சார்ந்த பிரமுகர்கள் மற்றும் மாவட்ட அரசாங்கத் திணைக்களங்களைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் கலந்து கொண்ட விசேட கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது -

தமிழ்த்தேசியப் போராட்டத்தினைத் தமிழீழத் தேசியத் தலைவர் முன்னெடுத்துச் செல்லும் வழியில் பல்வேறு வடிவங்களில் அதற்குத் தடைகள் ஏற்பட்டபோதும் அது தேசியத்தலைவரின் மதிநுட்பத்தால் உடைத்தெறியப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் அண்மையில் மதரீதியாக நடைபெற்ற சம்பவங்களுக்குப் பின்னால் சில தீய சக்திகள் உள்ளன. தற்போதுள்ள சமாதானச் சூழ்நிலையில் அந்தச் சக்திகளுக்கெதிராக அனைத்துத் தமிழர்களும் ஒன்றிணையவேண்டும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR

Your friend in the skies...

# கரவெட்டி கோட்டப் பாடசாலைகளின் தமிழ் மொழித்தின போட்டி முடிவுகள்

### இலக்கணப் போட்டி

முதலாம் இடம் - உ.லக்சிதா (விக்னேஸ்வரா கல்லூரி).

இரண்டாம் இடம் - சி.பிரகாஷ் (ஞானசாரியார் கல்லூரி).

மூன்றாம் இடம் - த.சுகந்தன் (வல்வெட்டி இ.த.க.பாடசாலை).

### கவிதையாக்கம்

முதலாம் இடம் - வை.கல்சியா (ஞானசாரியார் கல்லூரி).

இரண்டாம் இடம் - ச.ஆரணி (விக்னேஸ்வரா கல்லூரி).

மூன்றாம் இடம் - பு.நிருஜீனி (இமையாணன் அ.த.க.பாடசாலை), த.தவநேசன் (அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்).

### சிறுகதையாக்கம்

முதலாம் இடம் - சி.இலக்கியா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

இரண்டாம் இடம் - யோ.மயூரன் (கம்பர்மலை வித்தியாலயம்).

மூன்றாம் இடம் - ப.பிரகலாதன் (உடுப்பிட்டி அ.மி.கல்லூரி).

### பேச்சு

முதலாம் இடம் - வி.நிசாந்தி (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி).

இரண்டாம் இடம் - சி.கார்த்திஆனன் (இமையாணன் அ.த.க.பாடசாலை).

மூன்றாம் இடம் - சு.மேரிவினித்தா (விக்னேஸ்வரா கல்லூரி).

(13)

## தேசிய எழுச்சிப் பேரவையின் மாதாந்த சங்கம நிகழ்வு!

தெல்லிப்பழை பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின், மாதாந்த சங்கமம் நேற்றுமுன்தினம் அளவெட்டி மகாஜனாக் கல்லூரியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் - தேசியக் கொடியினை தேசிய எழுச்சிப் பேரவையின் மாவட்டச் செயலாளர் சூ.சிறில் ஏற்றிவைத்தார். பொதுச் சுடரினை டாக்டர். ருக்மணிதேவி ஏற்றிவைத்தார். இந்த நிகழ்வில் தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் சிவமகாராசா, தேசிய எழுச்சி பேரவையின் செயலாளர் சூ. சிறில், டாக்டர். ருக்மணிதேவி, ஊடகப்பேச்சாளர் கனகலிங்கம், மகேந்திர சர்மா, நடராசா ஆகியோர் உரையாற்றினர். இந்தக் கூட்டத்தில் தெல்லிப்பழைப் பிரதேசத்தில முன்னெடுக்கப்படவேண்டிய சமூக, பொருளாதார அபிவிருத்தி குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

தெல்லிப்பழைப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் இ.தனபாலசிங்கம் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.



கரைச்சிப் பிரதேசசபை, வட்டக்கச்சியில் நடாத்திவரும் தூய மணி முன்பள்ளிக்கு, புதிதாக அமைக்கப்படவுள்ள கட்டடத்திற்கான அடிக்கல்லினை கரைச்சி பிரதேச செயலர் பொன். நித்தியானந்தம் நாட்டிவைப்பதைக் காணலாம்.

## டெங்கு நோயைத் தடுப்பது குறித்து நல்லூரில் விழிப்புணர்வு கருத்தரங்கு

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நல்லூர்ப் பிரதேச சபையினரால் டெங்கு நோய்த் தடுப்பு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

கடந்த 19.07.2004ஆம் திகதி திங்கட்கிழமை கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஹேமலதா சிவசோதி, சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் எல் பரம்சோதி, நல்லூர் பிரதேச சபைப் பொதுச் சுகாதார உத்தியோகத்தர் சிவபாலன் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினர். இந்த நிகழ்வில் மாணவர்கள், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

இதேவேளை, உள்ளூராட்சி வார நிகழ்வுகளின் ஒரு கட்டமாக நல்லூர் பிரதேச சபையினரால் கொக்குவில் சந்தைவளாகத்தில் மரக்கன்றுகள் நாட்டப்படவுள்ளன.

இந்த நிகழ்வில் நல்லூர் பிரதேச சபையின் முன்னாள் செயலாளரும் தற்போது வலி. வடக்குப் பிரதேச சபையின் செயலாளருமான செ.செல்வரட்ணம் மற்றும் சனசமூக ஆய்வு உத்தியோகத்தர் ஏ.விஜயகுமார் ஆகியோரும் கலந்துகொள்வர்.

## வீதி விபத்தில் மாணவி காயம்

சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் மாணவி ஒருவர் தலையில் காயமடைந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் உயர்தர வகுப்பில் கல்வி பயிலும் பங்களாவீதி மீசாலையைச் சேர்ந்த பல்சிகா (வயது 17) என்பவரே காயமடைந்தவராவார்.

பாடசாலை விட்டு வீதியில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இவரை, பின்னால் வந்த மினிபஸ் மோதியதாலேயே இந்த விபத்து ஏற்பட்டதாக தெரியவருகின்றது. (34)

## மழை நீர்த்தொட்டி அமைக்கும் பயிற்சி பெற்ற மேசன்மாருக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன

குடாநாட்டில் மழைநீரைச் சேமிப்பதற்குப் பிரதேச செயலர்பிரிவு ரீதியாக மழைநீர் சேகரிக்கும் தாங்கிகள் அமைக்கப்படவுள்ளன.

தென்பகுதியில் உள்ள மழைநீர் அறுவடை சேகரிப்பு அமையததின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தினரால் இந்த மழை நீர்தாங்கிகள் அமைக்கப்படவுள்ளன.

இந்த மழை நீர்தாங்கிகள் அமைப்பது தொடர்பாக தெரிவுசெய்யப்பட்ட மேசன்கள் 10 பேருக்கு பொது அமைப்புக்களின் ஒன்றியத்தால் பயிற்சி வழங்கப்பட்டு, நேற்று திருநெல்வேலி விவசாயக் கல்லூரியில் இடம்பெற்ற வைபவத்தின்போது அவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

முதற்கட்டமாக மழைநீர் சேகரிக்கும் மாதிரித்தாங்கி ஒன்று திருநெல்வேலி விவசாயக்கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ளது.

## மத்திய கல்லூரியில் மருத்துவ முகாம்

(கொக்குவில்)

யாழ். மாவ்ட்ட சிகை ஒப்பனையாளர்கள் சங்கம், யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட நான்காம் வருட மாணவர்களின் அனுசரணையுடன் இலவச மருத்துவமுகாமொன்றை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. இந்த இலவச மருத்துவமுகாமில் இரத்தம், சிறுநீர், கண்பரிசோதனை என்பன பரிசோதிக்கப்பட்டு அதற்கான மருந்துகளும் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### விளையாட்டு

தென்புலோலி பெரிய தேவனந்தாய் சனசமூக நிலையத்தின் தேவிபாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மேம்பாட்டு தலைவர் ஆர்.என்.வசீகன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக இளைப்பாறிய மக்கள் வங்கி உத்தியோகத்தர் என். வல்லிபுரம் கலந்துகொள்வார். (17)

## அலேட் நிறுவன அதிகாரிகள் குழு யாழ். வர்த்தகர்களை சந்தித்தது

(யாழ்ப்பாணம்)

சர்வதேச அலேட் நிறுவனத்தின் அதிகாரிகள் குழு ஒன்று நேற்று யாழ். குடாநாட்டிற்கு வருகைதந்து, யாழ். மாவட்ட வர்த்தகசங்கப் பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடியுள்ளது.

சர்வதேச அலேட் நிறுவனத்தின் உபதலைவர் டாம் சிமித், இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி ஜெறோம் கஸன் ஆகியோர் தலைமையிலான குழுவினரே நேற்று யாழ்ப்பாணம் வந்தனர்.

இவர்கள் வணிகர் கழகத் தலைவர் ஜெயராஜா, யாழ். சிறு, நடுத்தர கைத்தொழில்மன்றம், மற்றும் கைத்தொழில்மன்றத் தலைவர்களுடன் வர்த்தகர்களின் மூலம் சமாதானத்திற்கு எவ்வகையாக பங்காற்ற முடியும், யாழ். குடாநாட்டு வர்தகர்களின் தரங்களை உயர்துவது, வர்த்தகர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் விரிவாக ஆராய்ந்த அலேட் நிறுவன அதிகாரிகள் யாழ். குடாநாட்டின் வர்த்தக நிலையங்கள் குறித்தும் நேரில் அவதானித்துள்ளனர். சர்வதேச அலேட் நிறுவன அதிகாரிகள் யாழ். குடாநாட்டு வர்த்தகர்களின் நிலை தொடர்பாக விசேடமாக ஆராய்வதே இந்த விஜயத்தின் நோக்கம் என்பது குறிப்பிடத்தக்கது.

### விக்கினேஸ்வரா பரிசளிப்பு விழா

நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று காலை 10 மணிக்கு அதிபர். திருமதி அ.சண்முகானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விகனேஸ்வரனும், பிரதம விருந்தினராக சமூக அபிவிருத்தி மன்றத் தலைவர் திருமதி. ந.ஜெகதீசனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

### உதைபந்தாட்டப் போட்டி

லண்டனிலுள்ள தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் 14பேர் கொண்ட உதைபந்தாட்ட அணியினர் பயிற்சியாளர் புவனேந்திரன் தலைமையில் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

இவர்கள் இங்கு பல்வேறு அணிகளுடனும் விளையாடவுள்ளனர். இதன்படி இன்று காலை 9 மணிக்கு தெல்லிப்பளை மகாஜனாக்கல்லூரி உதைபந்தாட்ட அணியுடன் பாடசாலை மைதானத்திலும், நாளை மாலை 4 மணிக்கு பல்கலைக்கழக மைதானத்தில் பல்கலைக்கழக அணியுடனும், நாளைமறுதினம் பாடசாலை தெரிவு அணிகளுடனும் மோதவுள்ளனர்.

இதன் பின்னர் எதிர்வரும் 26ஆம் திகதி கிளிநொச்சி பொது விளையாட்டரங்கில் கிளிநொச்சி கழகங்களுடனும், 27 ஆம் திகதி முல்லை அணிகளுடனும் மோதவுள்ளனர்.

### ஹொக்கி சுற்றுப் போட்டி

யாழ். மாவட்ட ஹொக்கி சங்கத்தினால் நடாத்தப்படவுள்ள சுற்றுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக்கழகங்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் தமது பதிவுகளை ப.தர்மகுமாரனிடம் உறுதிசெய்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட ஹொக்கி சங்கம் அறிவித்துள்ளது.

இந்தப் போட்டி அடுத்தவாரம் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### யாழ். பல்கலைக்கழகத்தில் வங்கமொழித் திரைப்படம்

யாழ்.பல்கலைக்கழக திரைப்பட வட்டம் வழங்கி வரும் திரைப்படம் காட்சித்தொடர் உலகப் புகழ்பெற்ற திரைப்பட நெறியாளர் சத்திய ஜித்ரே இயக்கிய அகன்துக் என்ற திரைப்படம் நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 3 மணிக்கு புவியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படும். படக்காட்சியில் இறுதியில் அ.யேசுராசா, க.சட்டநாதன் ஆகியோரால் நெறிப்படுத்தலின் கீழ் காண்பித்த படம் பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறும்.

## சிறு விளம்பரம்


### வைத்தியம்

பேரறிஞர் **Dr** பாலசுப்பிரமணியம் 21.07.2004 தொடக்கம் 25.07.2004 வரை **சித்தா** வைத்திய ஆராய்ச்சி நிலையம் காங்கேசன் வீதி சுன்னாகத்தில் சகல நாட்பட்ட நோய்களுக்கும் சிறப்பு சிகிச்சை வழங்குவார். தொலைபேசி - 077 - 6181988.

(793)

நிறஞ்சனாஸ் சங்கானை

சரத்குமார், சுகன்யா நடித்த

கேப்டன்

காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45(பு.நே) Random Hearts

(சி-2723)

நாகம்ஸ் சுன்னாகம்

சிம்பு, ரம்யா, கருணாஸ், மனோரமா நடித்த



குத்து

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்.

சரத்குமார், சாக்ஷி, விஜயகுமார், சுஜாதா, வடிவேலு நடித்த



காட்சிநேரம்:-10.30, 2.306.30, 9.3 (பு.நே)

மானஸ்தன்

(சி-2725)

# வரலாறு காணாத மலிவு விற்பனை

கொழும்பு ஜெயா புக் சென்ரரின் அனுசரணையுடன் யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தினால் பல்கலைக்கழகத்தில் இரண்டாவது தடவையாக வரலாறு காணாத மலிவு விற்பனை நடைபெறவுள்ளது.

**காலம் : 2004 ஜூலை 19 முதல் 29 வரை**

**நேரம் : தினமும் காலை 9.00 மணிமுதல் 6.00 மணிவரை (புதிய நேரம்)**

**இடம் : யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரை மண்டபம்.**

- சகலருக்கும் இலங்கை நூல்களுக்கு 10% கழிவு வழங்கப்படும்.
- பிறநாட்டு வெளியீடுகளுக்கு 15% கழிவு வழங்கப்படும்.
- மொத்தமாகக் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் இலங்கை வெளியீடுகள் தவிர பிறநாட்டு வெளியீடுகளை (ஒவ்வொன்றிலும் ஆகக்குறைந்தது 10 பிரதிகள்) கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவாக 20% வழங்கப்படும்.

பாடசாலைகள், பல்கலைக்கழகம், தொழில்நுட்ப கல்லூரிகள், கல்வியியல் கல்லூரி, பொதுநிறுவனங்கள், பிரதேசசபை நூலகங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் ஆகிய நிறுவனங்களுக்கு கடன் அடிப்படையில் புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்குரிய ஒழுங்குகள் செய்யப்படும்.

*தொடர்புகளுக்கு:* வணிக மாணவர் மன்றம், யாழ்.பல்கலைக்கழகம்.

(சி-2764)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# போர் நிறுத்த ஒப்பந்தத்தை திருத்துவது குறித்து ஆலோசனை

## நோர்வே அரசினூடாக வழங்கப்படவுள்ளது

பல சந்தர்ப்பங்களில் இரு தரப்பினராலும் போர்நிறுத்த ஒப்பந்தங்கள் மீறப்பட்டுள்ள நிலையில், தொடர்ந்தும் அதனைப் பாதுகாத்து வலுவாக நடத்திச் செல்வது தொடர்பாக நோர்வே அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்கு போர்நிறுத்தக் கண்காணிப்பு நடவடிக்கை எடுத்துள்ளது.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் இந்த ஆலோசனை அடங்கிய அறிக்கை, எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இலங்கைக்கு வரவுள்ள நோர்வே வெளி விவகார அமைச்சர் விதார் ஹெல்கிசனூடாக அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆலோசனையோடு பெரும்பாலும் போர்நிறுத்த ஒப்பந்தத்தைத் திருத்தி அமைப்பது தொடர்பான ஆலோசனையும் உட்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அதிகாரிகள் இது குறித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இங்கு செயற்படும் எட்டுப் போர் நிறுத்த அலுவலகங்களினதும் அதிகாரிகள் இதில் பங்குபற்றினர்.

கடற்பிராந்தியத்தில் போர்நிறுத்த ஒப்பந்தம் மீறப்படும் விதம், மற்றும் தரைப்பகுதியில் அவை மீறப்படும் விதம் ஆகியவை தொடர்பாகக் கவனத்தில் எடுத்து, அந்த நிகழ்வுகள் இனிமேலும் நிகழாதவண்ணம் இருக்க, எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் எவை என்பது குறித்தும், மாற்று ஆலோசனைகள் பற்றியும் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

அரசு-தமிழீழ விடுதலைப் புலிகள் ஆகிய இருதரப்புகளும் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறியுள்ளமை தொடர்பான அறிக்கை - போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவால் அரசிடமும், புலிகளிடமும் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

இதன்படி விடுதலைப் புலிகள் 414 தடவைகளும், அரசு 112 தடவைகளும் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறியுள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளரான கில் பொகா, போர் நிறுத்த ஒப்பந்தத்தோடு தொடர்புடைய நடவடிக்கைகள் சம்பந்தமாக ஒவ்வொரு வருடமும் பல தடவைகள் அனைவரும் ஒன்று கூடிக் கலந்துரையாடுவதாகவும் நேற்று முன்தினமும் அதுபோன்ற தொரு பேச்சு வார்த்தையே இடம் பெற்றதாகவும் தெரிவித்தார்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் புறூவ்ஹொவ்டே இன்னும் சில தினங்களுக்குள் விடுமுறையில் செல்வதற்குத் தீர்மானித்துள்ளமையால், அதற்கு முன்னர் இவை குறித்துக் கலந்துரையாடவேண்டி இருப்பதாகவும் அரசின் சமாதான செயலகத் தலைவர் ஜயந்த தனபால தெரிவித்தார். (தே)

# ஊவா முதலமைச்சர் பதவி இருவருக்கு பகிரப்படுகிறது

ஊவா மாகாணசபை கிளை முதலமைச்சர் பதவிக்கு - ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் நிலவிய கடும் போட்டி காரணமாக - இருவருக்கு சபையில் முதலமைச்சர் பதவி பகிர்ந்து கொடுக்கப்படவுள்ளது.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது -

மொனராகலை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் காமினி விஜிதமுனி சொய்ஸா, முதல் இரண்டரை வருடங்களுக்கும், ஏ.எம்.புத்ததாஸ் அடுத்த இரண்டரை வருட காலப்பகுதிக்கும் முதலமைச்சராக செயற்படவுள்ளனர்.

கடந்த மாகாணசபைத் தேர்தலில் ஊவா மாகாணத்தில் அதிகப்படியான வாக்குகளை புத்ததாஸவும், மொனராகலையில் விருப்பு வாக்குகளை விஜிதமுனி சொய்ஸாவும் பெற்றிருந்தனர்.

இந்த நிலையில், புத்ததாஸவுக்கே முதலமைச்சர் பதவி வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தி, பதுளை மாவட்டத்தில் போராட்டங்கள் நடத்தப்பட்டன. இது கட்சிக்குள் பிரச்சினையை ஏற்படுத்தும் என்ற அச்சத்தையடுத்து, பொதுஜன ஐக்கிய முன்னணி சமசந்தர்ப்பதீர்வுக்கு முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (01)

## கண்டியில் பலத்த பாதுகாப்பு

கண்டி எசல பெரஹராவை முன்னிட்டு, பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கண்டியில் பாதுகாப்பை உறுதிப்படுத்த சுமார் 7 ஆயிரம் பொலிஸார் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கண்டி எசல பெரஹரா- நாளை ஆரம்பமாகி, ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (01)

## வேலை வாய்ப்பு குறித்து

# அமைச்சர்களுடன் கலந்துரையாட ஜே.வி.பி எம்.பிக்கள் முடிவு

(கொழும்பு)

வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பை வழங்கும் நடைமுறைகள் குறித்தும், வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதிலுள்ள பிரச்சினைகள் குறித்தும் சம்மந்தப்பட்ட அமைச்சர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த, ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் - நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பை வழங்கும் முகமாக நடைமுறையிலுள்ள குறைபாடுகள் குறித்து நிதி அமைச்சருடனும் பேச்சுவார்த்தை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக கிடைக்கும் முறைப்பாடு, பேச்சுவார்த்தைகள் நடத்த ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

நாடாளுமன்றத்தில் நடைபெறுகின்ற இந்த விவாதத்துக்குள் இந்தப் பேச்சுவார்த்தைகளுக்கான சந்தர்ப்பத்தை கோரவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# ராகம ரயில் நிலையத்தில் நான்கு தமிழ் இளைஞர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு செங்கலடி மாணவர்கள் நான்கு பேர் ராகமவில் வைத்துப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

செங்கலடி சந்தை வீதியைச் சேர்ந்த கு.டிலோசன் (வயது 13), சேகர் மயூரன் (வயது 14), நாகராசா திலீபன் (வயது 14), கணேசமூர்த்தி ரமேஸ் (வயது 14) ஆகிய நான்கு இளைஞர்களுமே தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

கடந்த 13 ஆம் திகதி செங்கலடியிலிருந்து கொழும்பு நோக்கி ரயிலில் சென்றுகொண்டிருந்தவேளை இவர்கள் உறங்கிவிட்டனர்.

ராகம பகுதியில் ரயில் நின்றதும் திடீரென இறங்கி ஓடியவேளை சந்தேகம் கொண்ட பொலிஸார் - நான்கு பேரையும் கைது செய்தனர்.

ராகம நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டவேளை இவர்கள் நீதிமன்றத்தினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

# புதிதாகத் தெரிவான எம்.பி.க்கள் 80 பேருக்கு வரி இல்லாத வாகன அனுமதிப் பத்திரங்கள்

இந்தமுறை நாடாளுமன்றத்துக்குப் புதிதாகத் தெரிவாகியுள்ள 80 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இறக்குமதி வரியின்றி வாகனங்களை இறக்குமதி செய்வதன் பொருட்டு, வாகன அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு நாடாளுமன்ற விவகாரங்கள் மற்றும் கிறிஸ்தவ அலுவலகள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

புதிதாகத் தெரிவாகிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளின் அடிப்படையிலேயே இவ்வாறு அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், அதனோடு தொடர்புடைய அமைச்சரவைப் பத்திரம் அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என்றும், நாடாளுமன்ற விவகார அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதேவேளை, முன்னைய அரசின் ஆட்சிக்காலத்தின்போது, தீர்வையின்றி வாகனங்களை இறக்குமதி செய்யும் தீர்மானத்துக்கு அமைய வாகனங்களைப் பெற்றுக்கொண்ட இந்த முறை நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகிய உறுப்பினர்களிடமிருந்து அந்த வாகனங்களுக்குப் பணம் அறவிடாமல் விடுவது குறித்து, அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

இதன்படி அவர்கள் பெற்றுக் கொண்ட வாகனங்களுக்கான முழுத் தொகையையும் செலுத்தவேண்டும் எனவும் மில்றோய் பெர்னாண்டோ குறிப்பிட்டார். (தே)

# ஒருமைப்பாட்டுக்கு ஒத்துக்கொண்டால் அரசாங்கத்துடன் இணைவோம்!

## ஹெல உறுமய எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் ஐக்கியத்தைப் பேணுவதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் சத்தியப் பிரமாணம் செய்துள்ளதால், விடுதலைப் புலிகள் சார்பில் இவர்கள் எவ்வாறு பேச முடியும் என்று ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர் சங்கைக்குரிய ரத்னசீக தேரர் கேள்வி எழுப்பினார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கும், நாட்டின் ஒருமைப்பாட்டுக்கும் எதிராக நடப்பார்களானால், ஜாதிக ஹெல உறுமய அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும.

நாடாளுமன்றத்தில் வேறு மாற்றிடம் இல்லாததால் தான் எதிர்க்கட்சி அலுவலகத்தில் அமர்ந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# தமிழீழ விடுதலைப் புலிகளை கடுமையாக எச்சரிக்க வேண்டுமாம்

## பாதுகாப்புச் செயலர் கூறுகிறார்

கொழும்பில் இடம்பெற்ற தற்கொலைத்தாக்குதல் மற்றும் கிழக்கில் இடம்பெற்றுவரும் சம்பவங்கள் உட்பட குறிப்பிட்ட பயங்கரவாத செயற்பாடுகள் மூலம் போர்நிறுத்த உடன்படிக்கை மீறப்படுவது பற்றிப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு விடுதலைப்புலிகளைக் கடுமையாக எச்சரிக்கை செய்ய வேண்டும் எனப் பாதுகாப்பு அமைச்சின் செயலர் சிறில் ஹேரத் தெரிவித்தார்.

கடந்த பல வாரங்களாக கொழும்பைப் போன்றே வடக்கு-கிழக்குப் பிரதேசங்களிலும் ஏற்பட்ட அமைதியற்ற நிலவரம் குறித்து, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் எதிர் நடவடிக்கை என்ன என்பது பற்றிக் கேட்கப்பட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்பு மற்றும் வடக்கு-கிழக்குப் பிரதேசத்தில் ஏற்பட்ட அமைதியற்ற நிலவரம் போனறு, குண்டு வெடிப்புச் சம்பவங்களுடன் புலிகளுக்கு நேரடித்தொடர்புகள் இருப்பது இரகசியமானது அல்ல, இரு தரப்பினருக்கும் இடையே போர்நிறுத்தம், மீறப்படுவதற்கு விடுதலைப் புலிகளே பொறுப்பாவர்.

போர்நிறுத்தம் விடுதலைப் புலிகளாலே மீறப்படுகிறது என்பது எங்களைப் போன்றே போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும் தெளிவாகத் தெரிகிறது. ஆகையால், இது குறித்து விடுதலைப் புலிகளுக்கு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் கடுமையாக எச்சரிக்கவேண்டும்.

புலிகள் போர்நிறுத்தத்தை மீறுவதால், சமாதானச் செயற்பாடுகள் குழம்பிப்போவது குறித்துத் தெரியப்படுத்த வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

# சுயாதீன ஊடக கொள்கை நாடாளுமன்றத்தில் இணக்கம்

தகவல்களை சுயாதீனமாக வெளியிடுவதற்கான கொள்கை வகுக்கப்படவேண்டும் என நாடாளுமன்றத்தின் அனைத்து உறுப்பினர்களும் கொள்கை இணக்கம் வெளியிட்டனர்.

இது தொடர்பான விவாதம் நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது உரையாற்றிய தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனின் கருத்துக்களை நாடாளுமன்ற ஹன்சாட் பதிவில் இருந்து நீக்குமாறு சபாநாயகர் உத்தரவிட்டார்.

கஜேந்திரனின் உரைக்கு அரசாங்கத் தரப்பிலிருந்து பலத்த எதிர்ப்பு வெளியிடப்பட்ட அதேநேரம், தமிழரசுக் கட்சி இவவாறான கருத்துக்களை முன்வைத்தால், தாம் எதிர்க்கட்சிக்கு வழங்கும் ஆதரவை நீக்கி அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கப்போவதாக ஜாதிக ஹெல உறுமயவின் ஊடகப் பேச்சாளர் அத்துரலிய ரத்ன தேரர் எச்சரிக்கை விடுத்தார்.

விவாதத்தில் உரையாற்றிய அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க ஐக்கிய தேசியக் கட்சிக்கு சார்பாக பெரும்பாலான தனியார் ஊடகங்கள் செயற்படும்போது, அரசாங்க ஊடகங்களை தமது கட்சி பயன்படுத்துவதில் தவறு ஏதும் இல்லை எனக் கூறினார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஒலிபரப்பாகும் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தானத்துக்கு இலங்கை அரசாங்கம் பெருமளவு பணத்தை வழங்கி வருவதாகவும், நாடாளுமன்றத்தில் குற்றம் சுமத்தப்பட்டது.

## புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு

# எதிராக தாக்கலான மனுவில் பிரதிவாதியாக அமைச்சரவையும்!

(கொழும்பு)

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கும், விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனுக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை ரத்துச் செய்யக் கோரும் மனுவில் பிரதிவாதிகளாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அமைச்சரவையைக் குறிப்பிடுவதற்கு மேன் முறையீட்டு நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

ஜே.வி.பி, சிஹல உறுமய, சிங்கள ஜாதிக சங்மய மற்றும் திலக் கருணாரத்ன ஆகியோர் ஒன்றிணைந்து தாக்கல் செய்யப்பட்ட மனுவைப் பரிசீலித்த பின்னரே, மேன்முறையீட்டு நீதிமன்றம் இதற்கான அனுமதியை வழங்கியது.

ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட மனுவில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உட்பட ஐக்கிய கூட்டமைப்பின் அமைச்சரவை, விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரன் ஆகியோர் பிரதிவாதிகளாக ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளனர்.

முன்னர் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் புரிந்துணர்வு உடன்படிக்கை - அரசியல் அமைப்புக்கு ஏற்றமுறையில் இல்லை என்றும், அதனை ரத்துச் செய்யுமாறும் மனுவில் கோரப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (01)


## கண்ணிவெடிகள் புதைக்கப்பட்ட 57 கிராமங்கள் மட்டக்களப்பில்

யுத்தம் நிலவிய காலப்பகுதியில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்ட 57 கிராமங்கள் மட்டக்களப்பில் இனங்காணப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கண்ணிவெடி அகற்றும சர்வதேச நிறுவனமான மெக் நிறுவனம் இதனை அறிவித்துள்ளது.

47 கிராமங்கள் கண்ணிவெடி அபாயக் கிராமங்களாக இனங்காணப்பட்டுள்ளபோதும், இதுவரை கண்ணகிபுரம், வெல்லாவெளி, பாலையடிவெட்டை, காயன்கேணி, வவுணதீவு ஆகிய கிராமங்களிலேயே கண்ணிவெடி அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (01)

# பங்களாதேஷ் அணியை இந்தியா 8 விக்கெட்டுக்களால் தோற்கடித்தது






(கொழும்பு)

ஆசியக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது சுற்று ஆட்டத்தில் நேற்று இந்திய அணி எட்டு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

கொழும்பில் நேற்றுக்காலை ஆரம்பமான போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி, முதலில் பங்களாதேஷ் அணியைத் துடுப்பெடுத்தாட அழைத்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி, 10 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது அடுத்தடுத்து இரண்டு விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது.

பின்னர் களமிறங்கிய முகமட் அஷ்ரபுல் நிதானமாக ஓட்டங்களை எடுத்துக்கொண்டிருந்தபோது ரன் அவுட்டானார். இவர் 35 ஓட்டங்களைப் பெற்றார்.

இதன்பின்னர் வந்த ஆட்டக்காரர்களான அலோக் கபாலி 10, பைசல் ஹுதுசேய் 17, காலித் மசூட் 12, மந்தரல் இஸ்லாம் ரானா 21, காலித் மஹ்மூத் 22, அப்துர் ரசாக் 21 ஓட்டங்களைப் பெற்றனர்.

இறுதியில் 49.1 ஓவர்களில் பங்களாதேஷ் அணி 177 ஓட்டங்கள் பெற்ற நிலையில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.


பந்துவீச்சில் இந்திய அணி சார்பில் - இர்பான் பதான் 3, டெண்டுல்கர் 3 மற்றும் ஷேவாக், நெஹ்ரா, ஹர்பஜன்சிங் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பங்களாதேஷ் அணிக்கெதிராக ஆட்டத்தில் இந்திய அணியின் மோசமான பந்துவீச்சு காரணமாக 37 உதிரி ஓட்டங்களை பங்களாதேஷுக்குக் கொடுத்தது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஷேவாக் அதிரடியாக ஆடமுனைந்தார். 8 பந்துகளில் 3 பவுண்டரிகளுடன் 16 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இவர் முதல் ஓவரிலேயே ஆட்டமிழந்தார்.

இதன்பின்னர் டெண்டுல்கர், கங்கூலி இணைந்து நிலைத்துநின்று விளையாடினர். அணி வெற்றியை நெருங்கிக்கொண்டிருந்தபோது - கங்கூலி 60 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இவர் 100 பந்துகளில் 3 பவுண்டரிகள், 3 சிக்ஸர்களுடன் இந்த ஓட்டத்தை எட்டினார்.



இந்திய அணி 38.3 ஓவர்கள் முடிவில் 178 ஓட்டங்களைப் பெற்று எட்டு விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

சச்சின் டெண்டுல்கர் ஆட்டமிழக்காமல் 82 ஓட்டங்களைப் பெற்றார். இவர் 11 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் இந்த ஓட்டங்களைப் பெற்றார். லக்ஷ்மன் ஆட்டமிழக்காமல் ஒரு ஓட்டத்தைப் பெற்றார்.

# அரையிறுதி ஆட்டத்தில் ஆர்ஜென்ரீனா வெற்றி!




(லீமா)

பெருவில் நடைபெற்றுவரும் 'கோபா' அமெரிக்கக் கிண்ணத்துக்கான உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் தற்போதைய சம்பியனான கொலம்பிய அணியை 3-0 என்ற கோல்கணக்கில் தோற்கடித்து - ஆர்ஜென்ரீன அணி இறுதிப்போட்டியில் பங்குகொள்ளும் வாய்ப்பைப் பெற்றது.

லீமாவில் நேற்று அதிகாலை நடந்த அரையிறுதிப் போட்டியில் கொலம்பிய - ஆர்ஜென்ரீன அணிகள் மோதின.

இரண்டும் பலம் வாய்ந்த அணிகளாக இருந்ததால், ஆட்டம் பெரிதும் எதிர்பார்ப்பை உருவாக்கியிருந்தது.

ஆயினும், போட்டியின் முதல் பாதி ஆட்டத்திலேயே தனக்குக் கிடைத்த தண்டனை உதை வாய்ப்பைப் பயன்படுத்தி ஆர்ஜென்ரீன வீரர் சார்லோஸ் ரெவிஸ் முதல் கோல் அடித்து அணியை முதன்மைப்படுத்தினார்.

முதல் பாதி ஆட்டத்தில் முன்னிலை பெற்றிருந்த ஆர்ஜென்ரீன அணியை - இரண்டாவது பாதி நேர ஆட்டத்தின் தொடக்கத்திலேயே மேலும் வலுப்படுத்தினார் லூயிஸ் கொண்காலெஸ்.

இவர் அடித்த கோலால் அணி 2 கோல்களுடன் இருந்தது. பின்னர் பிகோலியா மூன்றாவது கோலை அடித்து ஆர்ஜென்ரீனாவின் வெற்றியை உறுதிப்படுத்தினார்.

ஆட்டநேரம் முடியும்வரை கொலம்பிய அணி கோல் அடிக்கப் போராடியபோதும் எந்தப் பயனும் கிட்டாமல் போனது.



இதனால் கொலம்பியா அரையிறுதியுடன் போட்டியிலிருந்து வெளியேற்றப்பட்டது.

ஆர்ஜென்ரீன அணி, இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் பிரேஸில் அல்லது உருகுவே அணியை எதிர்கொள்ளவுள்ளது.

# உதைபந்தாட்டப் போட்டி!


(நெல்லியடி)

தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ். மாவட்டப் பிரிவின் அனுமதியுடன் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் வதிரி - தேவரையாளி யங்லயன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று -

பிற்பகல் 3 மணிக்கு சிவானந்தா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மனோகரா விளையாட்டுக் கழக அணியும்,

பிற்பகல் 4 மணிக்கு மனோகரா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சிவானந்தா விளையாட்டுக்கழக 'ஏ' அணியும் மோதவுள்ளன.(13)

# இங்கிலாந்து கிரிக்கெட் வீரர் புட்சர் கார் விபத்தில் காயமடைந்தார்!



கார் விபத்தொன்றில் சிக்கி மார்க்புட்சர் காயமடைந்ததால் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான நடப்புத் தொடரில் அவர் ஆடுவது சந்தேகம் என்று இங்கிலாந்திலிருந்து வந்த செய்திகள் தெரிவிக்கின்றன.

இங்கிலாந்து கிரிக்கெட் வீரர் மார்க் புட்சர் பயணம் செய்த கார் கடந்த திங்கட்கிழமை விபத்துக்குள்ளானது.

அதிர்ஷ்டவசமாக லேசான காயங்களோடு புட்சர் தப்பிவிட்டார். அதனால் இன்று லோர்ட்சில் ஆரம்பமாகவுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் அவர் ஆடமாட்டார் என்று இங்கிலாந்து கிரிக்கெட் சபை அறிவித்தது.

வலதுகால் தொடைப் பகுதியில் ஏற்கனவே ஏற்பட்டிருந்த தசைப்பிடிப்பு காரணமாக, சிகிச்சை பெற்றுக் கொள்ளவதற்காக புட்சர் லண்டனில் உள்ள மருத்துவமனைக்குச் சென்று கொண்டிருந்த போது இந்த விபத்து நிகழ்ந்தது என்று இங்கிலாந்து பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

புட்சர் பயணம் செய்த காரின் பின்புறத்தில் மற்றொரு கார் வேகமாக வந்து மோதியதால், இந்த விபத்து நடைபெற்றது எனவும், அந்த விபத்தில் புட்சருக்கு லேசான காயங்கள் ஏற்பட்டதாகவும் அந்தச் செய்திகள் தெரிவிக்கின்றன.

புட்சருக்கு ஏற்பட்டுள்ள காயங்கள் குறித்து முழுமையான விவரம் எங்களுக்கு இன்னும் கிட்டவில்லை

அவருக்கு சிகிச்சை அளித்துவரும் மருத்துவர்களிடம் அவரது உடல் நிலை குறித்து முழுமையான அறிக்கையை கேட்டுள்ளோம்.

அந்த அறிக்கை கிடைத்தவுடன், அவர் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் ஆடுவது குறித்து முடிவு செய்வோம்.

ஆனால், நடைபெறவுள்ள முதலாவது போட்டியில் அவர் ஆடமுடியாது என்று இவருக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவர்கள் தொலைபேசி மூலம் எங்களுக்கு தகவல் அளித்துள்ளனர் என்று இங்கிலாந்து கிரிக்கெட் சபை நிர்வாகி ஒருவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.




## மாகாண மட்ட விளையாட்டுப் போட்டி

# கரப்பந்தாட்ட போட்டியில் சோமஸ்கந்த சம்பியன்!



சம்பியன் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்ட 19 வயதுக்குட்பட்ட புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி கரப்பந்தாட்ட அணியினர் சம்பியன் கிண்ணத்துடன்!



சம்பியன் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்ட 15 வயதுக்குட்பட்ட மட்டக்களப்பு விபுலானந்த வித்தியாலய கரப்பந்தாட்ட அணியினர் சம்பியன் கிண்ணத்துடன்!

(திருகோணமலை)

வடக்கு - கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் நடத்தும் மாகாணமட்ட விளையாட்டுப் போட்டிகளில் கடந்த திங்கட்கிழமை திருகோணமலையில் நடைபெற்ற ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகளில் 15 வயதுக்குட்பட்ட பிரிவில் முதலாம் இடத்தை மட்டக்களப்பு - கல்லடி முகத்துவாரம் விபுலானந்த வித்தியாலயமும் இரண்டாம் இடத்தை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியும் மூன்றாம் இடத்தினை வாழைச்சேனை இந்துக் கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

17 வயதுக்குட்பட்ட பிரிவில் முதலாம் இடத்தை திருகோணமலை மிகுந்தபுரம் வித்தியாலயமும் இரணடாம் இடத்தை அம்பாறை டி.எஸ். சேனநாயக்க கல்லூரியும் மூன்றாம் இடத்தை அம்பாறை மங்களராமய மகா வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.

19 வயதுக்குட்பட்டோருக்கான போட்டியில் முதலாம் இடத்தை யாழ்ப்பாணம் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியும் இரண்டாம் இடத்தை அம்பாறை டி.எஸ்.சேனநாயக்க கல்லூரியும் மூன்றாம் இடத்தை அம்பாறை மங்களராமய மகாவித்தியாலயமும் பெற்றுக் கொண்டன.

## யாழ். இந்துக் கல்லூரி அணி

# கொக்குவில் இந்துக் கல்லூரியை முதல் இனிங்ஸில் தோற்கடித்தது

யாழ். மாவட்ட பாடசாலை அணிகளிடையே நடைபெற்று வருகின்ற அஸ்ரா கிண்ண 14 வயதுப் பிரிவு கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் முதல் சுற்று ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை யாழ் இந்துக் கல்லூரி 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முதல் இனிங்ஸில் வெற்றிபெறறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ் இந்துக் கல்லூரி அணி 56 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 171ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

இதில் சுரேஸ்குமார் ஆட்டம் இழக்காமல் 55 ஓட்டங்களையும், சுதாகரன் 27 ஓட்டங்களையும், பெற்றுக் கொடுத்தனர்.

கொக்குவில் இந்து வீரன் க.நிரோஜன் 19 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.


பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 49 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 166 ஓட்டங்களை மட்டுமே பெற்றதால் 5 ஓட்டங்களினால் முதல் இனிங்ஸ் தோல்வியினை அடைய வேண்டிய நிலை ஏற்பட்டது.

கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 70 ஓட்டங்களை மட்டும் பெற்றிருந்த வேளை இறுதி ஆட்ட ஜோடி பெற்றுக் கொடுத்த 96 ஓட்டங்களின் துணையுடன் 166 ஓட்டங்களை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதில் சுதாகரன் ஆட்டம் இழக்காமல் 68 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்திருந்தார்.

யாழ். இந்துக் கலலூரி வீரர் உமாதரன் 44 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களையும், பிரியதர்சன் 29 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பின்னர் 8 ஓவர்கள் மட்டும் இருந்தவேளை விரைவாக ஓட்டங்களைப் பெற ஆரம்பித்த யாழ் இந்துக் கலலூரி 6 விக்கெட் இழப்பிற்கு 42 ஓட்டங்களை பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. (58)



பாடசாலை நேரத்தில்

# தனியார் நிறுவனங்களுக்கு செல்லும் ஆசிரியர், மாணவர் மீது நடவடிக்கை

## வலய அலுவலகங்களுக்குச் சுற்றுநிருபம்

பாடசாலை நேரத்தில் சில மாணவர்கள் மேலதிக தனியார் வகுப்புகளுக்குச் சமூகமளிப்பதாகவும், சில ஆசிரியர்கள் பாடசாலை நேரத்தில் தனியார் வகுப்புக்களை நடத்துவதாகவும் கல்வி அமைச்சருக்குக் கிடைத்த முறைப்பாடுகளையடுத்து, கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் வலயக் கல்வி அலுவலகங்களுக்கு சுற்றுநிருபம் ஒன்றினை அனுப்பிவைத்துள்ளார்.

அந்தச் சுற்று நிருபத்தில் - தனியார் கல்வி நிறுவனங்களுக்கு, பாடசாலை நேரத்தில் மாணவர்கள் செல்வதைத் தடுப்பதற்கும், கல்விச் சீரமைப்பின் கீழ் பிள்ளைகளின் நிபுணத்துவங்களை அபிவிருத்தி செய்வதில் கூடிய கவனம் மற்றும் முயற்சி எடுப்பதற்காகவும் சில நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளது.

மாணவர்களின் வரவு பற்றி ஆசிரியர்கள் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளதோடு, சுற்று நிருபங்களுக்கேற்ப பரீட்சைகளுக்குத் தோற்ற 80 வீதமான வரவின் தேவையை அமுல்படுத்தல்.

கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்கான பிரயோகச் செயற்பாடுகள் என்பனவற்றின் மீதும் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளதோடு பாடசாலை மதிப்பீடுகளின்படி தரங்கள் வழங்கப்படல் வேண்டும்.

எந்தக் காரணம் கொண்டும் பாடசாலை நடைபெறும் காலவேளையில் ஆசிரியரினால் தனிப்பட்ட வகுப்புக்கள் நடத்தக்கூடாது. யாராவது ஒரு ஆசிரியர் அவ்வாறு செய்வதாயின், அதிபர்கள் அதுபற்றி விசாரித்து சாட்சிகளடங்கிய அறிக்கை ஒன்றைத் தயாரித்து, அவ்வாறான ஆசிரியர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்வதற்கு உதவியாக அந்த அறிக்கை உரிய அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் அந்தச் சுற்றுநிருபத்தில் கோரப்பட்டுள்ளது. (58)

### உள்ளூராட்சி வாரத்தில் நூலகக் கண்காட்சி

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு, நல்லூர்ப் பிரதேசசபையினால நூலகக் கண்காட்சி நடத்தப்படுகிறது.

நல்லூர்ப் பிரதேச சபையின் கொக்குவில் சனசமூக நிலையத்தில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்தப் புத்தகக் கண்காட்சி நாளைவரை இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கண்காட்சியில் பல்வேறுபட்ட அரிய நூல்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### வாராந்த சொற்பொழிவு

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் சுற்றாடலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் நடைபெற்றுவரும் வாராந்த ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு 'ஆழ்வார் பாசுரங்களில் தெய்வீகம்' எனும் விடயம் பற்றி ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் ப.செல்வநாயகம் சொற்பொழிவாற்றுவார். (17)



சர்வதேச அலேட் நிறுவன அதிகாரிகள் குழு நேற்று யாழ். வணிகர் கழகத்தின், வணிகர் கழகங்களைச் சேர்ந்தவர்களைச் சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம்

## சிகை ஒப்பனையாளர் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு உதவித் திட்டங்கள்

யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம் - அங்கத்தவர் சார்ந்த பாதிக்கப்பட்டவர்களுக்கும், தொழில் நடத்துனர்களுக்கும், சிறந்த பெறுபெறுகளைப் பெற்ற மாணவர்களுக்கும் - உதவி மற்றும் ஊக்குவிப்பு வழங்க முன்வந்துள்ளது.

இந்த நடவடிக்கை மே மாதம் முதல் நடைமுறைக்கு வருவதாக அதன் செயலாளர் அ.அல்பேட் துண்டுப் பிரசுரம் ஒன்றின் மூலம் தெரிவித்திருக்கிறார்.

இதன்படி, அங்கத்தவர்கள் நோயுற்று இருக்கும் காலங்களில் தேவையான உதவிகளைக் கடிதம் மூலம் கோரும் பட்சத்தில், உதவிகள் வழங்கப்படும். அத்துடன் தொழில்சார்ந்த உதவியாக 5 ஆயிரம் ரூபா கடனடிப்படையில் வழங்கப்படவிருக்கிறது.

மரணக் கொடுப்பனவு 3 ஆயிரம் ரூபாவிலிருந்து 5 ஆயிரம் ரூபாவால் உயர்த்தப்பட்டுள்ளது.

சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவ, மாணவிகளைக் கௌரவித்துப் பணப்பரிசும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்து.

அதேவேளை, நலிவுற்ற தாய், தந்தைமார், ஊனமுற்றோர், முதியோர், விதவைகளின் பிள்ளைகளுக்கும் மாதாந்த உதவிப்பணம் வழங்க இருப்பதாக யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (206)

## கட்டைக்காடு பாடசாலைக்கு உபகரணங்கள் அன்பளிப்பு

வடமராட்சி கிழக்கு - கட்டைக்காடு றோ.க.த.க. பாடசாலைக்கு, சோவா (ZOA) நிறுவனம் கற்றல், கற்பித்தல் உபகரணங்களையும், உருக்கு அலுமாரிகளையும் வழங்கியுள்ளது.

அடிப்படை வசதிகளற்ற நிலையில் இயங்கிவரும் இந்தப் பாடசாலைக்கு நேரடியாகச் சென்ற சோவா நிறுவன அதிகாரிகள் பாடசாலை அதிபருடன் கலந்துரையாடி, உடனடித் தேவையான பொருட்கள் வழங்கப்பட்டன.

மேலும், குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்கும் பொருட்டு கிணறு ஒன்றையும் அமைத்துக் கொடுப்பதற்கு அவர்கள் முன்வந்துள்ளனர். (122)

## தொலைத்தொடர்பு வசதியின்றி அல்லலுறும் மண்டைதீவு மக்கள்

மண்டைதீவு பிரதேசத்தில் வசிக்கும் மக்கள், வெளியிடங்களில் உள்ள தங்கள் உறவினர்களுடன் தொடர்புகளை வைத்துக்கொள்ள ஒரு தொலைபேசி இணைப்பைக் கூட பயன்படுத்த முடியாத அளவுக்கு உள்ளனர்.

தீவினுள் நுழையும்போதே பெரிய எழுத்திலே உள்ள விளம்பரப் பலகையில் "கையடக்கத் தொலைபேசி, கமரா, வீடியோ கமரா கொண்டு செல்லத் தடை" என அறிவிக்கப்பட்டுள்ளது.

அவசர வேலைகள், தேவைகள், சுகதுக்கங்கள் என்றால் யாழ் நகருக்கு வந்தே தொடர்புகளை எடுக்க வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (113)

## மருதங்கேணி வைத்தியசாலைக்கு வசதி செய்துதருமாறு கோரிக்கை

(வடமராட்சி)

மருதங்கேணி கிராமிய வைத்தியசாலைக் கட்டட வேலைகள் முடிவடைந்த நிலையில் ஆளணி மற்றும் உபகரணங்கள் வழங்கி அதனைத் திறந்துவைக்க நடவடிக்கை எடுக்குமாறு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப. வேலாயுதபிள்ளை, யாழ். மாவட்ட பிரதி சுகாதார சேவைப் பணிப்பாளரிடம் கடிதம் மூலம் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது -

2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களால், முற்றாகச் சேதமடைந்த இந்த வைத்தியசாலை நிகொட் நிறுவன் உதவியுடன் 2 கோடி 25 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது.

இந்த வைத்தியசாலைக்கு நிகொட் திட்டத்தின்கீழ் 25 லட்சம் ரூபா செலவில் அம்புலன்ஸ் வண்டியொன்றும், 12 லட்சம் ரூபா செலவில் மின்பிறப்பாக்கியொன்றும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த வைத்தியசாலை இப்போது தனியார் கட்டடத்தில் வெளிநோயாளர் பிரிவில் மாத்திரம் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது. (17)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றுதல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு எதிர்வரும் 26 ஆம், 27 ஆம் திகதிகளில் தடுப்பூசி மருந்துகள் ஏற்றப்படவுள்ளன.

எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 9.00 மணி முதல் 10.30 மணிவரை நல்லூர்ப் பிரதேச சபையின் கொக்குவில் உப அலுவலகம் மற்றும் கொக்குவில் கிழக்கு பொன்மான்புரத்திலும், காலை 10.45 முதல் 12.15 வரை கொக்குவில் கிழக்கு காளிகோவில் சனசமூக நிலையத்திலும், மாலை 2.15 முதல் 3.45 வரை குளப்பிட்டி முதலியார் கோவிலடியிலும் வைத்து வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி மருந்து ஏற்றப்படவுள்ளது.

27 ஆம் திகதி காலை 9.00 மணிமுதல் 10.30 மணிவரை கொக்குவில் மேற்கு ஆறுகால்மடம் சனசமூக நிலையத்திலும், 10.45 முதல் 12.15 வரை கொக்குவில் மேற்கு பாரதி சனசமூக நிலையத்திலும் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி மருந்து ஏற்றப்படவுள்ளன. (ப)

## திருத்தப்படாத மண்டைதீவு வீதி போக்குவரத்துக்கு பெரும் சிரமம்!

(மண்டைதீவு)

தீவகத்தின் நுழைவாயிலில் உள்ள மண்டைதீவுப் பிரதேசத்தின் வீதிகள் அனைத்தும் மிகவும் மோசமான நிலையில் சேதமடைந்துள்ளமையால் அந்தப் பகுதி மக்கள் பிரயாணம் செய்வதில் பல அசௌகரியங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில், சில பாதைகள் கடற்படையினரால் மூடப்பட்டுள்ளமையால், தற்காலிகமாக அமைக்கப்பட்ட குடியிருப்புக்கள் ஊடாக பயணங்களை மேற்கொள்ளும் நிலை உருவாகியுள்ளது.

இதேவேளை, வீதியின் இரு மருங்கிலும் பற்றைகள் வளர்ந்து ஒரு வனாந்தரப் பிரதேசம் போன்று காட்சியளிக்கின்றமையும் இங்கே குறிப்பிடத்தக்கதாகும். (113)

## மக்களின் கூட்டுறவு வாழ்க்கை மூலம் வலுவான அரசியல் தீர்வை பெறமுடியும்

### விவசாய விழாவில் ஜெயக்குமார் அடிகளார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மக்களின் கூட்டுறவு வாழ்க்கை வியக்கத்தக்கவகையில் சிறப்பாகவுள்ளது என, கியுடெக் நிறுவனத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் அருட்திரு ஜெயக்குமார் அடிகளார் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இளவாலை ஹென்றியரசர் பாடசாலையின் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெற்ற விவசாயிகள் கௌரவிப்பு விழாவான 'வேளாண்மை விழாவில்' கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்தங்களின்போதும், பெரும் பொருளாதார நெருக்கடியின் போதும் எமது மக்களின் கூட்டுறவு வாழ்க்கையே எம்மை அழியாது பாதுகாத்ததுடன், பொருளாதாரத்தையும் கட்டி வளர்க்க உதவியது.

இன்று யாழ்ப்பாணத்தில் உள்ள வீரசிங்கம் மண்டபம் உள்ளிட்ட சில கட்டடங்களின் தோற்றத்துக்கும், யாழ். மக்களின் கூட்டுறவே காரணமாக அமைந்தது. நான் என்றில்லாது நாம் என்று எண்ணும் சிந்தனை எமது மக்களின் மனங்களில் உள்ளது. அவ்வாறு எண்ணாத சிலரும் தம்மை மாற்றிக் கொள்வதனூடாக எமது நாட்டைக் கட்டியெழுப்ப முடியும்.

தமிழ் மக்களின் மனங்களில் சுதந்திர உணர்வும், ஒற்றுமை உணர்வும் வலுப்பெற்றிருக்கும் போதுதான், வலுவான அரசியல் நிலையையும் அவர்களால் அடைய முடியும்.

உயர்ந்த மனித சமூகத்துக்கு அவசியமானது நீடித்த, நிலையான, ஒற்றுமையான குடும்ப வாழ்க்கை ஆகும். அதனைத் தருவது புரிந்துணர்வும், விட்டுக்கொடுப்பு மனப்பான்மையுமாகும். இதற்கு யாழ்ப்பாண மக்கள் சிறந்த உதாரணமாவர் எனவும் அவர் அங்கு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபர் அருட்திரு சிங்கராயர் அடிகளார், மாரீசன்கூடல் றோ.க.த.க. பாடசாலை அதிபர் உதயகுமார் மற்றும் அந்தப்பகுதி விவசாயிகள் போன்றோர் கலந்து கொண்டனர். (ப)

### முன்பள்ளி மாணவருக்கு பற்பசை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு, நல்லூர்ப் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட முன்பள்ளி மாணவர்களுக்கு இன்று பற்பசை வழங்கப்படவுள்ளது.

இன்று திருநெல்வேலி கம்பன் சனசமூக நிலைய முன்பள்ளி, அரியாலை ஜெயபாரதி சனசமூக நிலைய முன்பள்ளி, கோண்டாவில் நாராயண சனசமூக நிலைய முன்பள்ளி ஆகியவற்றைச் சேர்ந்த 100 மாணவர்களுக்குப் பற்பசைகள் வழங்கப்படவுள்ளது.

மொத்தமாக 470 மாணவர்களுக்கு இலவசமானப் பற்பசை வழங்கப்படவுள்ளதாகத், தெரிவிக்கப்படுகிறது.

## மண்டைதீவு பேதுருவானவர் ஆலய திருநாள் திருப்பலி நாளை ஆரம்பம்

மண்டை தீவு புனித பேதுருவானவர் ஆலயத்தின் வருடாந்த திருநாள் திருப்பலி நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்து தினங்கள் இடம்பெறும் இவ்வாலயத்தில் திருநாளில் எதிர்வரும் 31 ஆம் திகதி நற்கருணை எழுந்தேற்றமும், மறுநாள் ஆவணி 1ஆம் திகதி திருநாள் திருப்பலியும், கொடியிறக்கமும், திருச்சொரூப பவனியும் இடம்பெறவுள்ளது.

1989 ஆம் ஆண்டுக்குப் பின்னர் சுமார் 15 வருடங்களின் பின்பு இந்த வருடமே திருச்சொரூப பவனி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை இந்த ஆலயம் கடற்படையினரது உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வைக்குள்ளே உள்ள போதும் வழிபாட்டுக்கென மட்டும் இந்த ஆலத்திற்குச் சென்றுவர அனுமதிக்கப்பட்டுள்ளமை சுட்டிக் காட்டத்தக்கதாகும். (113)

### வைத்தியசாலைகளுக்கு 60 அம்புலன்ஸ் வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளுக்கு 60 அம்புலன்ஸ் வண்டிகள் வழங்கப்பட்டுள்ளதாக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் எஸ்.குமாரவேற்பிள்ளை தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த ஆண்டு மாத்திரம் வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அபிவிருத்திக்கென 1300 மில்லியன் ரூபா செலவிடப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (122)




# பூமரக்கன்று உற்பத்தி

**பூ**மரக்கன்று உற்பத்தி விற்பனையானது - ஒரு இலாபகரமான சுயதொழில் முயற்சியாகும். இதனை தங்களது தொழில் முயற்சியாகப் பலர் யாழ்.குடாநாட்டில் மேற்கொண்டு வருவதைக் காணலாம். இந்தப் பூமரக்கன்று உற்பத்தியில் புதிய கன்றுகளைப் பெற்றுக்கொள்வது மிக முக்கியமாகும். இதன்மூலமே தொழிலைத் தொடர்ந்து, கொண்டுசெல்லமுடியும்.

பரம்பரையாகப் பூமரக்கன்றுகளை உற்பத்தி செய்பவர்கள் தமது அனுபவத்தைக் கைக்கொண்டு, புதிய கன்றுகளைப் பெறுவதற்குப் பழகியுள்ளார்கள். இந்தமுறையினால், கன்றுகள் பல நோய்களுக்கு உள்ளாவதுடன், அதன் வளர்ச்சியிலும் பாதிப்பு ஏற்படும். இதனால் பழைய முறைகளுக்குப் பதிலாக நவீனமுறைகளைக் கைக்கொள்ளலாம்.

விஞ்ஞான முறைகளைப் பயன்படுத்துவதன்மூலம், இந்தக் குறைபாடுகளற்ற கன்றுகளைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

மூன்று விதமான முறைகள் பயன்படுத்தப்படுகிறது.

1. பிரதான செடியின் கிளைகள்மூலம் கன்றுகளைப் பெறுதல்.

2. விதைகள்மூலம் கன்றுகளைப் பெறுதல்.


3. ஹோமோன்களை உபயோகித்து கன்றுகளைப் பெறுதல்.

இதில் ஏதாவது ஒரு முறையைப் பயன்படுத்திக் கன்றுகளைப் பெற்றுக் கொள்ளலாம். கிளைகள் மூலமாகக் கன்றுகளைப் பெறும்போது, பிரதான செடியின் வளர்ச்சியை அறிந்து வைத்திருத்தல் அவசியமாகும்.

ஹோமோன்கள் மூலம் பெறப்பட்ட கன்றுகள் வளர்ச்சி அடையும்வரை தேவையான பராமரிப்பை வழங்கவேண்டும். ஹோமோன்களில் பல விதமான இரசாயனங்கள் அடங்கியுள்ளன. ஹோமோன்கள்மூலம் கன்றுகளைப் பெறுவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட கன்றுகள் பற்றி தெரிந்து வைத்திருப்பது அவசியம். ஒவ்வொரு கன்றும், ஒவ்வொரு விதமானவை. சில கன்றுகளின் தண்டு கடினமாக இருக்கும். சில கன்றுகளின் தண்டு மென்மையாக இருப்பதைக் காணலாம். கிளைகளைக் கன்றுகளுக்காக வெட்டி எடுக்கும் போது, அதன் தேவைக்கேற்றவாறு முற்றி உள்ளதா என்று தெரிந்துகொள்வது அவசியம்.

ஹோமோன் செய்யும்போது தேர்ந்தெடுக்கப்பட்ட கன்றுகளை முளைக்க வைப்பதற்குப் பயன்படுத்தும் மண் கலவையைத் தொற்று நீக்கிக்கொள்ள வேண்டும். இதன் மூலம் நோய்களிலிருந்து கன்றுகளைப் பாதுகாத்துக் கொள்ளலாம். தும்புகள், ஆற்று மண் கலந்து மண்ணைத் தயாரிக்க வேண்டும். இவ்வாறு பெற்றுக்கொண்ட மண்ணைப் பொலித்தீன் பைகளில் அல்லது பூச்சாடிகளில் போடவேண்டும்.





பிரதான செடியிலிருந்து கன்றுக்காகக் கிளைகளை வெட்டும் பொழுது, அவதானமாக இருக்கவேண்டும். முறையற்ற விதத்தில் வெட்டிக்கொண்ட கிளைகள் முளைக்க வைப்பதற்கு உகந்ததல்ல.

கன்றுகளை வெட்டுவதற்காக செகட்டேரியன் என்ற கத்திரிக்கோலைப் பயன்படுத்துவது மிக முக்கியமாகும். அவ்வாறு இல்லையெனில், கூர்மையான கத்தி ஒன்றைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

வெட்டிக்கொண்ட கிளைத்துண்டின் அடி உடைந்து, நசிந்து, வெடிக்காதபடி இருக்க வேண்டும். இல்லாவிடின் வேர் அழுகுவதோடு பல நோய்கள் பீடிக்க ஏதுவாகும். துண்டுகளை வெட்டி எடுத்த பின்னர் இரண்டு, மூன்று இலைகளை விட்டுவிட்டு ஏனையவற்றை நீக்கி விடவேண்டும்.

கிளைத்துண்டுகளின் நீளம் ஆகக்குறைந்தது ஆறு அங்குலமாக இருக்கும்படி வெட்டிக் கொள்ளவேண்டும். இவ்வாறான துண்டுகளே ஹோமோன்கள் செய்வதற்கு உகந்தது.

ஹோமோன்களைத் தண்டுகளின் அடியில் பூசவேண்டும். மேலதிகமான ஹோமோன்களைத் தட்டி நீக்கிவிடவேண்டும். அதிகளவு பூசப்பட்டிருந்தால், அது கன்றுகளின் வளர்ச்சியைப் பாதிக்கும்.

ஏற்கனவே தயாரித்து வைக்கப்பட்டுள்ள மண்சட்டியினுள் தடி ஒன்றினை விட்டு, மண்ணை விலத்திய பின் அதனுள் தண்டுகளை வைக்கவேண்டும். இவ்வாறு செய்யாமல் நேரடியாகவே தண்டுகளை மண்ணினுள் செலுத்தும் பொழுது, ஹோமோன்கள் மண்ணில் கலந்துவிடும்.

பொலித்தீன் உறைகளில் வைக்கப்பட்ட தண்டுகள் வேர் விட்டதன் பின்னர் - பூச்சாடிகளுக்கு மாற்றிக் கொள்ளலாம். சில செடிகளின் தண்டுகள் வேர் பிடிப்பதற்குப் பல காலம் எடுக்கும். சில செடிகளுக்கு அவ்வாறு தேவைப்படாது.

இவ்வாறு பெற்றுக்கொண்ட கன்றுகளைத் தகுந்த முறையில் பராமரிப்பது அவசியம்.

14 நாட்களுக்கு ஒரு தடவை உரக் கலவை போடவேண்டும். அரை அவுன்ஸ் உரக்கலவையை 1 கலன் நீருடன் கலந்து போடுவது நன்று.

வெவ்வேறு விதமான ஹோமோன்களைத் தூளாகவும், ஜெலியாகவும் பெறமுடியும். அனைத்து ஹோமோன்களிலும் ஒரே செயற்பாடு நடைபெறுகிறது. *


**- சசி சந்திரகாசன்**

# தலையணை உறை தயாரித்தல்

வீட்டில் இருந்தவாறு சுயதொழிலில் ஈடுபட விரும்புவோருக்குத் தலையணை உறை தயாரித்தல் தொழில் உகந்ததாகும்.

இதனை ஓர் உபதொழிலாகவும் மேற்கொள்ளலாம். தையல் பற்றிய அடிப்படை அறிவுடன் அல்லது பயிற்சியுடன் தொழிலை ஆரம்பிக்கலாம்.

சகல மட்டத்திலுமுள்ள மக்களும் தலையணைக்கான உறைகளைப் பயன்படுத்துகின்றனர். எனவே, இதற்கான சந்தை வாய்ப்பு எப்போதும் உண்டு. உற்பத்திச் செலவைக் குறைப்பதன்மூலம், குறைந்த விலையில் தலையணை உறைகளைத் தயாரித்து அதிக இலாபத்தை ஈட்டலாம்.



உறையில் பூப்போடக்கூடிய தையல் இயந்திரத்தைப் பயன்படுத்துவதன் மூலம், பொருளின் தரத்தை மேம்படுத்தலாம். அல்லது பப்றிக் பெயின்டைப் பயன்படுத்தி, வர்ணம் தீட்டுவதன் மூலமும் அழகுபடுத்தலாம். இதன்மூலம் நல்ல சந்தைவாய்ப்பைப் பெற்று வருமானத்தையும் அதிகரிக்கலாம்.

குறுகிய கால பயிற்சியே தொழிலை ஆரம்பிப்பதற்குப் போதுமானதாகும்.

மூலப்பொருட்களாக, நிற, வெள்ளைத் துணிகள், அதற்கேற்ற நிற நூல் வகைகள் தேவைப்படும். உபகரணங்களாக, தையல் இயந்திரமும், கத்திரிக்கோல், அடையாளமிடும் கருவிகள், தையல் ஊசிகள் இருப்பது அவசியம்.

ஒரு தலையணை உறைக்கு 3/4 யார் துணி போதுமானது.

ஒரு நாளில் பூவேலை செய்த தலையணை உறை ஒன்றையும், பூ வேலை இல்லாத தலையணை உறை ஒன்றையும் பகுதிநேர வேலையாகச் செய்யமுடியும். ✪

# தொழில் வங்கி



| நிறுவனம் | வெற்றிடமாகவுள்ள பதவிகள் | அடிப்படைத் தகுதி | முடிவு திகதி |
|---|---|---|---|
| யு.என்.டி.பி. | 01. வெளிக்கள வேலையாள் சிவில் நிர்வாகம். (மட்டக்களப்பு). | தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ் அல்லது தேசிய டிப்ளோமாச் சான்றிதல். 1 - 2 வருட அனுபவம். | 24.07.2004 |
| | 02. வெளிக்கள வேலையாள் மீன்பிடியியல் (மட்டக்களப்பு அல்லது அம்பாறை). | தேசியக் கணக்கியல் சான்றிதழ் அல்லது அவை சார்ந்தவை உயர்தரத்தில் உயிரியல் விஞ்ஞானம். | |
| | 03. நிதி உதவியாளர் (மட்டக்களப்பு). | நிதியியல் அல்லது வர்த்தமாணிப்பட்டம் அல்லது அவை சார்ந்தவை. 5 வருட அனுபவம். சமூக விஞ்ஞானம் | |
| | 04. திட்ட உதவியாளர். (மட்டக்களப்பு) | அல்லது பொருளியல் பட்டதாரி அல்லது அவை சார்ந்தவை. 3 வருட அனுபவம். | |

தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப் பெறவிரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

யாழ்ப்பாணம்

# வேலை நேரத்தில் ஏற்படும் தடைகள்

நேர முகாமை என்பது எமது நேரத்தைப் பயன்படுத்தும் முறையில் செலவிட மேற்கொள்ளப்படும் ஓர் சுயநிர்வாக முறையாகும்.

இதனை நாம் நிகழ்காலத் திட்டம் ஒன்றைத் தயாரிப்பதனூடாக அடையமுடியும். ஆனால், நேர முகாமை சம்பந்தமான நிகழ்ச்சித்திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கு முன்னர், நாம் வேலை செய்வதற்கான நேரத்தில் ஏற்படும் தடைகள் பற்றி அறிந்திருக்க வேண்டும். அப்பொழுதுதான், முறையான நிகழ்ச்சித் திட்டம் ஒன்றினை நாம் கணித்துக்கொள்ள முடியும்.

வேலை செய்யும் நேரத்தில் பலதடைகள் ஏற்படுகின்றன. இவற்றுள் ஒன்று நாமாக ஏற்படுத்திக்கொள்பவை. இரண்டாவது பிறரால் ஏற்படுத்தப்படுபவை.

**முதலில் நாமாக ஏற்படுத்திக் கொள்ளும் தடைகள் பற்றிப் பார்ப்போம்**

❖ஒரு வேலையை ஒத்திப் போடுதல் அல்லது தாமதம் செய்தல்:-

எமது மனதுக்குப் பிடிக்கவில்லை அல்லது மகிழ்ச்சி அளிக்கவில்லை என்பதற்காக எமது வேலைகளைத் தள்ளிப்போட்டு விடுகிறோம். இதனால், உரிய நேரத்தில் அந்த வேலையைச் செய்யாது விடுவதால், அந்த வேலைக்கு அதிக நேரத்தைச் செலவிட வேண்டிவருகிறது. அதுமட்டுமல்ல கூடுதலாக உழைக்கவேண்டியும் ஏற்படுகிறது. கடமை உணர்வுடனும் ஒரு செயலினால் கிடைக்கும் இலாப, நட்டத்தையும் மனதிற்கொண்டு வேலைகளை ஒத்திப் போடாமல் அவற்றை உடனுக்குடன் முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

❖ இயலாது எனக் கருதினும் மறுத்துக் கூறமுடியாமை:-

சில சந்தர்ப்பங்களில் ஏனையோர்களது வேண்டுகோள்களை மறுத்துக்கூற முடியாமல், அவர்களது வேலைக்காக கணிசமான நேரத்தை ஒதுக்க வேண்டியுள்ளது. அவர்கள் மனதை நோகடிக்கக் கூடாது என்ற காரணத்தால், அதிக வேலைப்பளுவைச் சுமக்க வேண்டியேற்படுகிறது. இந்த நிலைமையும், எமது குறிக்கோள்களை அடைய முடியாதபடியும், தேவையற்றதாகவும் இருந்தால், எம்மால் செய்ய முடியாதென நயமாக மறுத்துக்கூற முயலவேண்டும்.

❖ செய்யவேண்டிய வேலையை ஒழுங்குபடுத்திக் கொள்ளவும்:-

அவசரமானதும், அவசியமானதுமான பணிகளைப் பிரித்து, அவற்றுள் எந்த முதலில் செய்வது என முன்னுரிமை அளித்து, அதற்கான நேரத்தை ஒதுக்க வேண்டும். ஒரு வேலையில் செய்யவேண்டிய பணிகளைத் தெளிவாகத் தெரிந்திருக்க வேண்டும்.

❖ ஒரு வேலையை நூறுவீதம் சரியாகச் செய்யவேண்டும் என்ற அங்கலாய்ப்பு:-

ஒரு வேலையைப் பரிபூரணமாகப் புரிய வேண்டும் என்ற எண்ணம் பல சந்தர்ப்பங்களில் எதிர்மறை விளைவுகளை அளிக்கின்றது. நாம் எவ்வளவுதான் ஒரு வேலையைத் திருப்திகரமாகச் செய்தபோதிலும், அதில் சிறு தவறுகள் நேர்ந்தால், அதையிட்டு அலட்டிக் கொள்ளத் தேவையில்லை.

❖ பொறுப்புக்களை பிரித்தளிக்காது தாமே சுமையைக் கூட்டிக்கொள்ளுதல:-

ஒரு பொறுப்பான பதவி வகிப்பவர் ஒரே நேரத்தில் பல வேலைகளைச் செய்ய நேரிடுகிறது. அனைத்து வேலைகளையும் தானே செய்தாகவேண்டும் என நினைத்தல் பொருத்தமானதல்ல.

எனவே, பொறுப்புமிகுந்தவர்கள் தமது வேலைகளைப் பிறருக்குப் பகிர்ந்தளிக்க வேண்டும். இதன்மூலம் குறித்த பணியை, குறித்தகால இறுதியில் செய்துமுடிக்க இயலும்.

ஆனால், பல முகாமையாளர்கள் தமது வேலைகளைப் பகிர்ந்தளிக்க விரும்புவதில்லை. இதற்குக் காரணம் -

✡தன்னால் மட்டுமே ஒரு வேலையைச் சிறப்பாகச் செய்ய முடியும் என்ற தவறான எண்ணம்.

✡தனது தவறை அல்லது நடத்தைகளைப் பிறர் அறிந்துவிடுவார்கள் என்ற அச்சம்.

✡ஓய்வற்ற உழைப்பில் காட்டும் அக்கறை.

✡தனக்குக் கீழ் வேலை செய்பவர்கள் தன்னை மிஞ்சிவிடக்கூடாது என்ற அங்கலாய்ப்பு.

✡தனக்குத்தான் பொறுப்புணர்வு உள்ளதென்றும், ஏனையவர்களுக்குப் பொறுப்புணர்ச்சியே கிடையாது என்ற தவறான எண்ணம்.

✡அலுவலகத்தில் அல்லது நிறுவனத்தில் தான் ஒரு முக்கியமான ஆள் தன்னை விட்டால் எதுவும் நடக்காது என்ற எண்ணம்.

வேலைகளைப் பிரித்தளித்தல் என்பது, அந்த வேலையைச் செய்யக்கூடிய அதிகாரத்தையும், பொறுப்பையும் அளிப்பதாகும். அதற்காக அந்த வேலைகளைத் திறமையாகச் செய்யக்கூடிய நபர்களைத் தெரிந்தெடுத்து, அந்தக் கடமைகள் ஏன் ஒப்படைக்கப்படுகின்றன எனவும் இந்த வேலையால் எதிர்பார்ப்பது என்ன என்பதையும் தெளிவாக விளக்குதல் வேண்டும்.

ஒரு வேலையை ஒப்படைத்தால் மட்டும் போதாது. அந்த வேலையில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளை விடுவித்து, உதவிபுரிய வேண்டும்.

**தொடர்பாடல் குறைபாடுகள்**

தொழில் நிலையங்களில் எற்படும் பல்வேறு பிரச்சினைகளுக்குக் காரணம் தொடர்பாடற் குறைபாடேயாகும். நாம் பெரும்பாலும் பேச்சின் மூலமும், எழுத்தின் மூலமும் தொடர்பாடல்களை மேற்கொள்கின்றோம். இதற்காக அதிக நேரத்தைச் செலவழிக்கின்றோம். ஒரு முறையான தொடர்பாடலால் பெருமளவு நேரத்தை சேமித்துக் கொள்ள முடியும்.

ஒரு செய்திப் பரிமாற்றம் முழுமையான பலன்களைச் எய்த வேண்டுமெனில், அந்தச் செய்தியில் பின்வரும் அம்சங்கள் காணப்பட வேண்டும்.

☝செய்திகள் தெளிவாகக் கூறப்பட வேண்டும்.

☝செய்தியைப் புரிந்து கொள்பவர் - புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கவேண்டும்.

☝குழப்பமோ, சந்தேகமோ ஏற்படா வண்ணம் அந்தச் செய்தி அமைந்திருக்க வேண்டும்.

☝செய்தி சுருக்கமாயிருக்க வேண்டும்.

எமது தொடர்பாடலின் போது, நேரத்தை வீணாக்கும். சந்தர்ப்பங்கள் பின்வருமாறு ஏற்படுகிறது:-

☞அதிகம் பேசுதல்

☞தேவையற்ற விடயங்களைப் பேசுதல்.

☞பிறருக்குப் புரியாத வகையில் வேகமாகத் தாழ்ந்த குரலில் அல்லது முணுமுணுத்துப் பேசுதல்.

☞தெளிவின்றி எழுதுதல்.

☞நீண்ட வாக்கியங்களை பயன்படுத்தல்.

☞சம்பந்தமில்லாத விடயத்தை எழுதுதல்.

☞வீண் விவாதங்களில் நேரத்தைக் கழித்தல்.

☞கோப்புக்களைத் தேடுதல்.

இவ்வாறு ஒரு நாளில் நாம் வீணாக்கும் நேரத்தை அளவிட்டு அறிந்து கொள்ளமுடியும். இவ்வாறு நேரம் விரயமாவதால், நாம் வேலை செய்கின்ற நேரம் குறைவடைந்து விடுகிறது. கணிப்பீடுகளின்படி, வேலை செய்யும் எட்டுமணித்தியாலத்தில் 3-4 மணித்தியாலங்கள் மேற்கூறியவாறு விரயமாவதாகக் கூறப்படுகிறது.

விவாதம் புரிவது எமது நேரத்தையும், சக்தியையும் வீணாக்குவதோடு, தொழில் அமைதியின்மையையும் தோற்றுவிக்கின்றது. பொதுவாகப் பின்வரும் நிலைகளில் விவாதங்கள் தோன்றுகின்றன.

நான் கூறுவதுதான் சரியென்று கூறுதல், பேசுபவரின் கருத்தை விளங்கிக் கொள்ளாமை, பாரபட்சஉணர்வு, சமநிலைத் தன்மையில்லாமை, அவமதிப்புநிகழ்தல், மட்டம் தட்டுதல், சிரித்துப் பேசுதல், உணர்ச்சி வசப்படுதல். இந்த நிலைமையைத் தவிர்ப்பதற்குப் பிறர் கூறுவதை அவதானித்துப் பேசக் கற்றுக் கொள்ளவேண்டும். தொடர்பாடலின் பொழுது, மன முதிர்ச்சியடைந்த உணர்வுடன் பேசுவதே பேச்சு வார்த்தையின் பலனை அடையக் கூடியதாயிருக்கும்.

**பிறரால் ஏற்படுத்தப்படும் நேர விரயங்களைப் பற்றிப் பார்ப்போம்**

எங்கள் வேலை நேரம் பின்வரும் சந்தர்ப்பங்களில் ஏனையவர்களது தலையீட்டால் தடைப்பட்டுவிடுகிறது.

♦மேலதிகாரியினால் ஏற்படும் தடைகள்:-

குறிப்பிட்ட நேரத்தில் நாம் எமது வேலைகளை முடிக்காமையாலும், எமது வேலைகள் திருப்திகரமாக இல்லாமையினாலும் மேலதிகாரிகள் தங்கள் வேலைகளைத் திட்டமிட்டு அமைத்துக் கொள்ளாததனாலும், அடிக்கடி மேலதிகாரிகள் அழைக்க நேரிடுகிறது.


♦தொலைபேசி அழைப்புக்களால் ஏற்படும் நேரவிரயம்:-

தொலைபேசி அழைப்புக்களுக்கு அன்பாகவும், சுருக்கமாகவும் பேசி கருமமாற்ற வேண்டும். அலுவலகத் தொலைபேசியை அவசியமான பணிகளுக்கு மட்டும் பயன்படுத்தவேண்டும்.

♦வேலைத்தளத்துக்கு எம்மைத் தேடித் திடீரெனவரும் நபர்களால் ஏற்படும் காலதாமதம்.

♦எதிர்பாராத நிகழ்ச்சிகளால் ஏற்படும் நேரத் தடைகள் என்பனவும் தொழில்களில் காலதாமதத்தையும், நேர விரயத்தையும் ஏற்படுத்துகின்றன.

இவ்வாறாக, வேலை செய்வதற்கான நேரத்தில் ஏற்படும் தடைகளை அறிந்து கொண்டு, நேர நிகழ்காலத் திட்டத்தைத் தயாரிப்பது உபயோகமானதாக இருக்கும்.



# அலுவலக பயன்பாட்டுக்கான மரப்பொருட்கள் தயாரித்தல்



மரத்தளபாட உற்பத்தித் தொழில் சார்ந்த ஓர் உபதொழிலாக இந்த தொழிலை மேற்கொள்ளலாம்.

பெரிய வேலைத்தளங்களில் கழிக்கப்படும் பலகைத்துண்டுகள், விறகுகாலையில் காணப்படும் சிறு மரக்குற்றிகள் போன்றவற்றை இதற்குப் பயன்படுத்தலாம். அலுவலகத் தேவைக்கான கடிதத்தட்டுக்கள், ஊசி, கிளிப்புத் தட்டுக்கள், கடித இறாக்கைகள், புத்தக, இறப்பர் முத்திரைகளுக்கான இறாக்கைகள், கடதாசி பாரமேற்றிகள், அடிமட்டங்கள் போன்ற சிறுபொருட்களைத் தயாரிக்கலாம்.

தளபாட உற்பத்தி நிலையங்களிலிருந்து கழிவு செய்யப்படும் மரத் துண்டங்கள், விறகுகாலையிலிருந்து பெறப்படும். மரக்குற்றிகளிலிருந்து இந்தப் பொருட்கள் செய்யப்படுவதனால், உற்பத்திச் செலவு குறைவாகும்.

எனவே பாடசாலைகள், அலுவலகங்கள் போன்றவை இந்தப் பொருட்களை விரும்பிவாங்கலாம்.

இதனால் இந்த உற்பத்திப் பொருட்களுக்கு நிலையான சந்தை வாய்ப்பு உண்டு. கழிவுத்துண்டங்களைப் பயன்படுத்தி, குழந்தைகளுக்கான சிறு விளையாட்டுப் பொருட்களைச் செய்வதன் மூலமும், சந்தை வாய்ப்பை மேலும் விரிவுபடுத்தலாம்.

இந்தத் தொழிலுக்குத் தேவைப்படும் உபகரணங்கள்-

மரமறுக்கும் வாள், உளிகள், சீவுளிக்கூடு, சுத்தியல் (3/4 கி.கி), கூர் உளி, திருப்புளி, அடிமட்டம், முச்சதுரம், எண்ணெய்க்கல், பிடிச்சிராவி, வாள் ஆகியனவாகும்.

பெற்றுக்கொள்ளப்பட்ட சிறிய பயிற்சியுடன் இந்தத் தொழிலை ஆரம்பிக்கலாம். அனுபவம் ஏற்பட தொழிலில் பல மாற்றங்களைப் புகுத்தி, மெருகூட்டித் தரமான பொருட்களை உற்பத்தி செய்யலாம்.

வீட்டின் ஒரு சிறு இடத்திலேயே இந்தத் தொழிலை நடத்தலாம். ◆

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சங்கானை | பருத்தித்துறை | நெல்லியடி |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 60/= | 50/= | 70/= | 45/= | 60/= | 50/= | 40/= |
| வெண்டிக்காய் | 20/= | 25/= | 40/= | 20/= | 20/= | 40/= | 50/= |
| உருளைக்கிழங்கு | 80/= | 70/= | 80/= | 90/= | - | 70/= | 80/ |
| கத்தரிக்காய் | 30/= | 25/= | 40/= | 40/= | 30/= | 25/= | 40/= |
| பாகற்காய் | 70/= | 70/= | 80/= | 80/= | 80/= | 50/= | 60/= |
| கரட் | 80/= | 80/= | 80/= | 80/= | 80/= | 100/= | 70/= |
| பீற்றூட் | 30/= | 40/= | 50/= | 35/= | 30/= | 40/= | 40/= |
| முருங்கைக்காய் | 100/= | 100/= | 120/= | 110/= | 120/= | 70/= | 80/= |
| வெங்காயம் | 30/= | 25/= | 30/= | 35/= | 40/= | 40/= | 60/= |
| பச்சை மிளகாய் | 60/= | 60/= | 70/= | 60/= | 60/= | 80/= | 70/= |

செய்திக் கட்டுரை - எஸ்.ஜெயா

# திருநெல்வேலிச் சந்தையும் ஆற்ற வேண்டிய பணிகளும்

யாழ்ப்பாணத்தின் முக்கியமான சந்தைகளில் ஒன்றாக திருநெல்வேலிச் சந்தை இன்று காணப்படுகின்றது. இந்தச் சந்தையானது அண்மையில் புனரமைப்புச் செய்யப்பட்டு மக்களின் பொருட்கொள்வனவுகளை இலகுவாக்கியுள்ளது.

மக்கள் தமது அன்றாட பொருட் தேவைகளை நிறைவு



செய்துகொள்வதற்குத் திருநெல்வேலிச் சந்தையானது இன்று பெரிதும் உதவியாகவிருக்கின்றது.

சாதாரண பொருட்கள் முதல், அசாதாரணப் பொருட்கள் வரை இந்தச் சந்தையில் வாங்கக் கூடியதாக இருப்பதால், இந்தச் சந்தையில் மக்கள் கூட்டம் தினமும் அலைமோதும்.

திருநெல்வேலிச் சந்தையில் பொருட்களை வியாபாரம் செய்வதற்கும், பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கும் உள்ளூரில் இருந்து மட்டுமல்ல வெளியூர்களிலிருந்தும் பலர் வருவார்கள்.

மாட்டுவண்டியில் பயணம் செய்யும் காலத்தில் இருந்து, இன்று மோட்டார் வாகனங்கள், ஹையேஸ் வாகனங்களில் பொருட்களைக் கொள்வனவு செய்யும் காலம் வரை திருநெல்வேலிச் சந்தை- மக்களிடையே மிகுந்த செல்வாகைப் பெற்றுக் காணப்படுகிறது.

திருநெல்வேலி 'குப்பம்' எனும் நிலையைக் கடந்து கிராமமாகி, இன்று கிராமம் எனும் நிலையைக் கடந்து நகரமாகிக் கொண்டிருப்பது பெரு மகிழ்ச்சிக்குரியதே. இந்த நிலையை எடுத்துக் காட்டும் வகையில் தலைநிமிர்ந்துள்ள கட்டடங்களும், நவீன சந்தை மாடிக்கட்டடங்களும், அதன் புனரமைப்புப் பணிகளும் எடுத்துக் காட்டுகின்றன.

ஆனால், அதன் சுகாதார, நிர்வாக அமைப்புக்களைப் பொறுத்தமட்டில், மிகவும் கீழ்த்தர நிலைப்பாட்டினையே கொண்டுள்ளன. பாதுகாப்பு அற்றமுறையிலான மரக்கறி வியாபாரமும், அசுத்தமான இடத்திலான மீன்கறி வணிகமும் நுகர்வோரை வெறுப்படையச் செய்வனவாகவே காணப்படுகின்றன.

இவற்றால், அதிகரித்த இலையான் பெருக்கம், தொல்லை தரும் கொசுப் பெருக்கம் என்பவற்றோடு, கண்ட கண்ட இடங்களில் கழிவை அகற்றுவதால் தோன்றும் நுளம்புப் பெருக்கமும் சொல்லிலடங்காதவை.

இவற்றினைவிட தெருவோரப் பழக்கடைகளும், சுகாதாரமற்ற விற்பனைமுறைகளும் அதனை நுகரும் மக்களது ஆரோக்கியத்தைக் குறைத்துக் கொள்ளும் ஒரு செயற்பாடாகவே காணப்படுகின்றன.

இதுபோன்றே, தேங்காய்க் கடைகளின் சித்தல் ஆட்டமும் மக்களால் பொறுக்கமுடியாதவை. கழிவுத் தேங்காய்களை வீதியில் அடித்தல், தேங்காய்த் தும்பினை வீதியோரம் கொட்டுதல், அதனை அள்ளுவதற்கு [illegible]டும் சனக்கூட்டம் என திருநெல்வேலி நகர் அல்லோலகல்லோலப்படுகின்றது.

இதனைவிட மிக வேடிக்கையான விடயம், செயல் என்னவென்றால் இந்த நகர்ப் பகுதியானது - காலை 6 மணி முதல் 12 மணிவரை நல்லூர்த் தேர்த் திருவிழா போன்று தினமும் சனக்கூட்டம் நிரம்பி' வழியும், இதனிடையே வீதிக் கண்காணிப்

**போதிய கழிப்பறை வசதி களும், உள்ளக சுகாதார கட்ட மைப்புக்களும் சீரின்மை யால்- பாவனையாளர்கள் பல அசௌகரி யங்களை அனுபவிப்பதோடு, பொருத்தமற்ற இடங்கள் பல அசுத்தமாக்கப்படுகின்றன. இதனால், நோய்த் தொற்று தீவிரமடைய வாய்ப்பு ஏற்படுகின்றது.**

புப் பொலிஸார் வீதி ஒழுங்கினை மேற்கொள்ளாது தமது வருவாயையே குறியாகக் கொண்டு, அந்த நெருக்கடியிலும் வாகனங்களின் பயண ஆவணங்களையே பரிசோதிப்பர். இவ்வாறே பிரதேசசபை ஊழியர்



களும் - துவிச்சக்கர வண்டி இலக்கத் தகட்டுப் பரிசோதனையை மேற்கொள்வர்.

இங்கு கவனிக்கவேண்டியது என்னவென்றால் -

காலை வேளைகளில் இந்த வீதியூடாக - பல்கலைக்கழக மாணவர்கள், ஊழியர்கள்- தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள், ஊழியர்கள் - ஆசிரிய கலாசாலை மாணவர்கள், ஊழியர்கள் - சந்தை நடவடிக்கையில் ஈடுபடும் நுகர்வோர், விற்பனையாளர் மற்றும் வங்கி ஊழியர்கள், வாடிக்கையாளர் என நிறைந்திருப்பதே ஆகும். இப்படிப்பட்ட நேரத்தில் வீதி ஒழுங்கைப் பேணி, விபத்தினைத் தடுத்துப் போக்குவரத்துத் தாமதத்தினைக் குறைத்தல் வீதியோரப் பொலிஸாரின் கடமையாகும். ஆனால், அது பின்பற்றப்படவில்லை.

இதேபோன்றே, சந்தையின் வியாபாரப் பொருட்களின் தூய்மையினைப் பேணி நுகர்வோரைப் பாதுகாப்பது - பௌதீக சுகாதாரப் பரிசோதகரின் கடமை. ஆனால், இங்கு இவர்கள் என்ன செய்கிறார்களோ.

மேலும், இங்கு வாகனத் தரிப்பிடமின்மையால் பல வாகனங்கள் வீதியின் இருமருங்கும் நிறைந்திருப்பதனால், போக்குவரத்தில் பெரும் நெருக்கடி நிலைமையை ஏற்படுத்திவிடுகின்றது. இதில் வரி அறவீட்டாளரின் பதில் என்ன?

[illegible]திய கழிப்பறை வசதிகளும், உள்ளக சுகாதார கட்டமைப்புக்களும் சீரின்மையால் - பாவனையாளர்கள் பல அசௌகரியங்களை அனுபவிப்பதோடு, பொருத்தமற்ற இடங்கள் பல அசுத்தமாக்கப்படுகின்றன. இதனால், நோய்த் தொற்று தீவிரமடைய வாய்ப்பு ஏற்படுகின்றது.

எனவே, இத்தகைய குறைகளை அடிப்படை மட்டத்திலிருந்து களைவது உள்ளூராட்சி நிறுவனங்களின் கடமை அல்லவா? இவர்கள்தானே வரியை அறவிடுகின்றனர். வருவாய் பெறுபவர்கள் வசதியைச் செய்து கொடுக்கவேண்டியது பொறுப்பல்லவா? இதனைத் தட்டிக் கேட்பது மக்கள் உரிமையல்லவா?

இதேபோன்று, இன்னுமொரு முக்கிய பிரச்சினை இந்தப் பகுதி மக்களுக்குண்டு. அது தான் பிற்பகல் 6 மணி தொடக்கம் நள்ளிரவு 12 மணிவரை இந்த வீதியில் பெருங்குடி மக்களின் தொல்லை.

இதில் இளைஞர், முதியோர் போன்ற வேறுபாடின்றிப் போதையில் வீதியால் போவோர் வருவோரிடம் ஏற்படுத்தும் சச்சரவு, சண்டைகள், இதனால் இந்தப் பிரதேசம் இரவில் அமைதியின்றிக் காணப்படுவதோடு, இந்த வீதிவழிப் பயணம் அச்சத்தை ஊட்டுகின்றது. இவர்களை அடக்குவது யார்? சம்பந்தப்பட்டவர்கள் - சமூகப் பொறுப்புள்ளவர்கள் - அடக்கியாள முன்வருவார்களா? காலம்தான் பதில் சொல்லும். ☆

தரிசனம் - நிஜன்

# எமது குழந்தைகள்

நமது சமூகத்தில் மூத்தவர்களினதும், சமூக நேயமுடையவர்களினதும் கவனத்தை - உடனடி அக்கறையைக் கோரிநிற்கின்ற விடயங்கள் சில உண்டு. அவற்றுள் ஒன்றுதான் நமது குழந்தைகள் பற்றிய விடயம். குழந்தைகள் எனக்குறிப்பிடப்படுவது கண்டு கைக்குழந்தைகளையோ அல்லது தவழ்கின்ற பருவத்தினரையோ பற்றியென எண்ணிவிடாதீர்கள். வளர்ந்தோர், சிந்திக்கும் பருவத்தை எய்தியோர் எனக் கருதப்படும் வயதுக்கு முந்திய பருவத்துக் குழந்தைகளைத்தான் குறிப்பாகச் சொல்ல வருகின்றேன்.

காலம் மாறிவருவதும் உலகம் முன்னேறி வருவதும் யாவரும் நன்கறிந்த விடயங்கள்தான். இந்த மாற்றம் - முன்னேற்றம்

**கண்டதை உள்வாங்கிக் கொள்கிற பசுமையான மனசுள்ள நமது குழந்தைகள் நாளாந்தம் இத்தகைய படங்களையும், பாடல்களையும் பார்த்தும், கேட்டும் வருவார்களெனில் என்ன விளைவு வருமென்கிறீர்கள்?**

என்பவை யாவும் உரியமுறையில் நமக்குக் குறிப்பாக நம் குழந்தைகளுக்கு நலன் தருவனவாக அமைகின்றனவா?

தொலைக்காட்சிப் பெட்டி என்பது வெகுசாதாரணப் பொருளாய்க் கொள்ளப்படுகிறது. ஒரு சூழலில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஒரு நவீன சாதனம், பயன்தரத்தக்க சாதனம் வீட்டில் இருப்பது நல்லவிடயம்தான். ஆனால், அதை நாம் எவ்விதம் பயன்படுத்துகிறோம் என்பது முக்கியமல்லவா? தொலைக்காட்சித் தொடர்கள் என்ற பெயரில் ஒளிபரப்பாகின்ற 'பொழுது கொல்லிகள்' ஒருபுறம் தனியார் தொலைக்காட்சி நிலையங்களின் உபயமாய் ஓயாது காட்டப்படும் திரைப்படங்கள் மறுபுறம். போதாக் குறைக்கு அந்தச் சினிமாப்படங்களின் பாடல்களை நமது உள்ளூர் இளசுகளும் சிறிசுகளும் பாடி, ஆடும் காட்சிகளைக் கொண்ட - நினைத்தாலே குமட்டும் நிகழ்ச்சிகள் என விடிந்ததிலிருந்து உறங்கப் போகும்வரை எத்தனை ஒளிபரப்புக்கள்?

சிலரைக் கேட்டால் - பொழுது போக்குக்குத்தானே இதெல்லாம். இதிலே என்ன நட்டம் ஏற்படப் போகிறது? என்கிறார்கள்.

இதில் வருகிற நட்டம் காசால அளந்து கொள்கிற நட்டம் அல்ல. நேர நட்டம், காலம் காலமாய்ப் பேணிவந்த அடிப்படை நல்ல பண்புகளுக்கு ஏற்படுகிற நட்டம் என நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

சொந்தமாக அறிவிருந்தும் சிந்திக்கமறுக்கின்ற வளர்ந்தவர்களை விட்டுவிட்டாலும், வளரும் குழந்தைகளைப் பற்றி அக்கறை காட்டுவது அவசியம் அல்லவோ?

கண்டதை உள்வாங்கிக் கொள்கிற பசுமையான மனசுள்ள நமது குழந்தைகள் நாளாந்தம் இத்தகைய படங்களையும், பாடல்களையும் பார்த்தும், கேட்டும் வருவார்களெனில் எந்த விளைவு வருமென்கிறீர்கள்?

அவர்களது மனம் சிறிது சிறிதாய் நஞ்சூட்டப்படுகிறது என்பதை நமது மூத்தோர் (நம்மையும் சேர்த்துத்தான்) ஏன் எண்ணிப்பார்க்கவில்லை.

வயசுக்கு மீறிய சிந்தனை, குழப்பம், தன்வயதொத்த பிள்ளைகளோடு இத்தகைய படங்களை, பாடல்களைப் பற்றிக் கலந்து பேசி குருட்டுத்தனமான விளக்கங்களோடு வாழ்வை எதிர்கொள்ளும் பரிதாபம் இவர்களுக்கு நேர்ந்துவிடாதா?

ஆண், பெண் உறவும், பாலியல் விடயங்களும் எவ்வளவு தவறான முறையில் - இத்தகைய படங்கள், பாடல்கள் மூலம் அணுகப்படுகின்றன? அந்த விடயங்களை கௌரவமான முறையில் விளங்கிக் கொள்வதற்கு எமது சிறிசுகளுக்கு வாய்ப்பே அற்றுப்போகின்றதே?

இத்தகைய சீரழிவுகளை உள்வீட்டில் அனுமதித்துவிட்டுப் பரீட்சைப் பெறுபேறு குறைந்துவிட்டதென்றும், பழக்கவழக்கம் சரியில்லையென்றும் புலம்புவதில் அர்த்தமென்ன இருக்கமுடியும்?

நம்பிக்கையோடும், பற்றோடும், நேரிய விளக்கங்களோடும் வாழ்க்கைக்குள் பிரவேசிக்க வேண்டிய பிள்ளைகளுக்கு- தவறான மாயைகளை ஊட்டி, அவர்கள் திசைகெட்டுப் போனபிறகு கழிவிரக்கம் கொள்வதில் என்ன பயன்?

குழந்தைகளின் மன உலகமே தனி. அது அவர்களின் முதிர்ச்சிப் பக்குவத்தோடு இயைந்த ஒன்று. அவர்களின் மகிழ்ச்சி, அவர்களின் ஈடுபாடு, அவர்களின் கலையுணர்ச்சி இவையெல்லாம் அர்த்தம் மிகுந்தவை. அந்தந்த வயதுக்குத் தகுந்த அவர்களின் உடல், உளத் தேவைகளை உணர்த்துவது எமது கடமை.

ஆனால், துரதிஷ்டம் - நாம் அதுபற்றிப் பெரும்பாலும் கவனம் கொள்வதேயில்லை. பெரிதாகப் பொருட்படுத்துவதுமில்லை. அவர்களுக்கு ஒவ்வாத சூழல்..., அவர்களுக்கு ஒவ்வாத பேச்சு..., அவர்களுக்கு ஒவ்வாத படங்கள், பாடல்கள்..., நடத்தைகள்..., நகைச்சுவைகள். இப்படித் தானே இன்று பார்க்கக் கிடைக்கிறது.

குழந்தைகளால் ஜீரணிக்க முடியாத 'முற்றல்' விடயங்களைப் பார்க்கவும், கேட்கவும் அனுமதிப்பது பாவமில்லையே...?

அண்மையில் யாழ்.நாவலர் மண்டபத்தில் ஏற்பட்ட ஒரு அனுபவத்தை இங்கு குறிப்பிட வேண்டும்.

'பஞ்சவர்ண நரியார்' சிறுவர் நாடகம் குழந்தைகளின் உளவியல் அறிந்து, அவர்களின் உலகம் புரிந்து படைக்கப்பட்ட ஒரு அரிய கலை விருந்து.

சிறுவர்களுக்கான நாடகமொன்றில் குழந்தைகளின் உளவியலறிந்து உருவாக்கப்பட்ட அந்தப் படைப்பில் பெரியவர்களும் உந்தப்பட்டு - பாடவும், ஆடவும் முன்வந்ததைப் பார்க்கமுடிந்தது.

சிறுவர்களது உற்சாகம் விபரிக்க இயலாதது. நாடகத்தில் லயித்துப் போய்த் தங்களை மறந்து ஆடவும், பாடவும் அவர்களும் முன்வந்தார்கள் - ஆடினார்கள், பாடினார்கள். இது இயல்பான - பொருத்தமான ஒரு எழுச்சிக்கான உந்துதல். இத்தகைய பிஞ்சு மனங்களுக்கு இந்தவிதமான கலை அளிக்கைகள்தான் இன்று தேவை. இதனை எத்தனை பேர் உணர்ந்துகொண்டு ஊக்குவிக்கப்போகிறோம்? ☆

யாழ்ப்பாணம்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*ஆற்றின் அளவறிந்து கற்க அவைஅஞ்சா*
*மாற்றம் கொடுத்தற் பொருட்டு.*

திருக்குறள்

# நமது நோக்கு

## கஜேந்திரனின் உரையும்; பேரினவாதிகளின் குரைப்பும்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றம் கூடிய போது வழக்கத்துக்கு மாறாக அமைதியாகவே அமர்வின் நிகழ்வுகள் ஆரம்பித்து தொடர்ந்தபோதும், பின்னர் ஒரு கட்டத்தில் கடந்த அமர்வுகளில் நிகழ்ந்ததைப் போல் அமளி துமளிகள் ஏற்பட்டு சபையில் கூச்சலும் குழப்பமும் ஆட்சி செலுத்தியுள்ளமை, குறிப்பிடத்தக்கதாகும்.

வழமை போன்று, இந்தக் கூச்சல் குழப்பங்களுக்கு, வித்திட்டவர்கள் அரசாங்கத் தரப்பைச் சேர்ந்தவர்களும், ஹெல உறுமயவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் தான்.

அன்றைய நாடாளுமன்ற அமர்வின் போது தகவல்களை சுயாதீனமாக வெளியிடுவதற்கான கொள்கை ஒன்று வகுக்கப்பட வேண்டுமென அனைத்து உறுப்பினர்களும் கொள்கை இணக்கம் ஒன்றினை வெளியிட்ட வேளையில், தமிழ் மக்களுக்கும், தமிழ் ஊடகவியலாளர்களுக்கும் இழைக்கப்பட்ட கொடுமைகள் தொடர்பாக எவரும் எதனையும் எடுத்துரைக்காத நிலையில் தமிழர் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் அது தொடர்பாக உரையாற்றும் போதே அரச தரப்பு மற்றும் ஹெல உறுமய தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழப்பத்தை உண்டு பண்ணும் வகையில் சீற்றத்துடன் நடந்து கொண்டனர்.

நாடாளுமன்ற அமர்வுகளின் போது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பேச விடாது குழப்பி, கேலி செய்து, அவமதித்து அவர்களின் உரைகளை ஏனையோர் கேட்கவிடாது தடுக்கும் சிங்கள பேரினவாத நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாரம்பரிய பண்பாடாக நீண்டகாலம் இருந்துவருவது தெரிந்ததே.

ஆர்.ஜி.சேனநாயக்க, கே.எம்.பி. ராஜரதன, றொபேட் குணவர்த்தனா, நெவில் பெர்ணான்டோ, சிறில் மத்தியூ, தினேஷ் குணவர்த்தனா என இந்தத் தமிழின எதிர்ப்புச் சிங்களப் பேரினவாதிகளின் பட்டியல் முற்றுப்புள்ளி அற்ற ஒன்றாக இன்னமும் தொடர்ந்து கொண்டே போகிறது.

எந்தக் காலத்திலும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் மக்களின் வாழ்வியல், மற்றும் அரசியல் பிரச்சினைகள் குறித்தும், சிங்கள ஆட்சியினர் தமிழினத்திற்கு இழைத்து வரும் கொடுமைகள், அழுத்தங்கள், மற்றும் நெருக்கடிகள் குறித்தும் நாடாளுமன்றில் உரத்துக் குரலெழுப்ப முயன்ற போதெல்லாம், சிங்களப்பேரினவாத அரசியல்வாதிகள் அதனைக் கூச்சலிட்டுக் குழப்பி, அந்தச்செய்திகள் வெளிப்படாமல் செய்யும நடவடிக்கைகளில் இறங்குவது இலங்கை நாடாளுமன்றத்தில் ஒரு மரபாகவே இருந்து வந்துள்ளது. இதனை ஆட்சி பீடத்தை அவ்வப்போது அலங்கரித்த ஆளும் கட்சியினர் ஒரு கண்காட்சியாகப் பார்த்து ரசித்து வந்துள்ளார்களேயொழிய அத்தகைய குழப்பவாதிகளுக்கு எதிராக கண்டிப்பான, கடுமையான நடவடிக்கை எதனையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

நாடாளுமன்றில்- தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே இந்த நிலை என்றால், நாட்டில் தமிழ் மக்களுக்கு எத்தகைய அவலம் ஏற்பட்டிருக்கும் என்பதை ஊகித்தே உணர்ந்து கொள்ள முடியும்.

ஒரு சந்தர்ப்பத்தில் நாடாளுமன்றில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஒருவரை, நாடாளுமன்றத்தில் வைத்து அவமதித்து அவரைக கழுவில் ஏற்றிக் கொல்லவேண்டும் என்று அநாகரிகமாகப் பேசிய சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை கைதட்டி ரசித்த ஜனநாயக அவமதிப்பும் இந்த நாட்டிற்தான் நடந்தேறிய வரலாறும் உண்டு.

நேற்று முன்தினம் கஜேந்திரன் பேசியது ஒன்றும் பிழையானதோ, பேசக் கூடாத தன்மை கொண்ட கருத்துக்களையோ அல்ல....

அவர் தமிழ் மக்களுக்கும், தமிழ் ஊடகவியலாளர்களுக்கும இழைக்கப்பட்ட அநீதிகள் குறித்தே பேசியுள்ளார்.

தமிழ் மக்கள் தொடர்ந்தும் சிங்கள அரசுகளால் ஏமாற்றப்பட்டு வருவது குறித்தே பேசியுள்ளார்.

இந்த நிலையில் எமது மக்கள் மீது மீண்டும் போர் ஒன்றை அரசு திணிக்குமானால், அதன் விளைவுகள் பாரதூரமாக இருக்கும் என்றே கூறியுள்ளார்.

இதனை அவர் அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் பேசவில்லை, ஒரு எச்சரிக்கையாகவே பேசியுள்ளார்.

அதாவது மீண்டும் ஒரு யுத்தத்தை அரசு மேற்கொள்ள முனைந்தால், அதன் காரணமாகத் தமிழர்கள் கொல்லப்பட நேர்ந்தால், அதனை முறியடிக்க வேண்டிய தவிர்க்க முடியாத அவசியம் தமிழ் மக்களுக்கும் ஏற்படும். அப்போது படைத்தரப்பினரும் உயிராபத்தைப் பெருமளவில் எதிர்கொள்ள வேண்டிய நிலைமை உருவாகும் என்பதையே அவர் தெரிவித்துள்ளார்.

இது அரச கட்சி உறுப்பினர்களாலும், ஹெல உறுமயக் காரர்களாலும் பொறுக்க முடியாமல் இருந்தால் அதற்கு யாரும் எதுவும் செய்ய முடியாது.

சமாதான முயற்சிகளை எதிர்ப்போரான ஜே.வி.பி.யினரும் ஹெல உறுமயக்காரர்களும் சாதாரண சிங்களமக்களுக்கும், அரச படையினருக்கும் நன்மை செய்கிறார்கள் என எவரும் கருதுவார்களாயின், அவர்களை என்னவென்று சொல்வது?

உண்மையில் தங்களின் அரசியல் எதிர்காலத்தைச் சிங்கள மக்களினதும், படையினரதும் குருதியில் எழுத வைக்கும் இந்தக குழப்பவாத அரசியல்வாதிகள், நாட்டை மேலும் அவலநிலைக்குள் தள்ளுவதைத் தவிர வேறு எதையும் செய்யப்போவதில்லை.

இதனைத் தான் கஜேந்திரன் தனது உரையில் விளக்க முயன்றுள்ளார். இதனைப் புரிந்து கொள்ள வேண்டியவர்கள் சிங்களப் பொது மக்களும், சமாதானத்தை வலியுறுத்தும் சர்வதேச சமூகத்தவர்களும் தான்.

யுத்த ஒடுக்கு முறைக்கும், அரசியல் அடக்கு முறைக்கும் முகம் கொடுத்து இழப்பதற்கு ஏதும் இல்லாத நிலையில் தமது வாழ்வியல் - அரசியல் உரிமைகளை வென்றெடுக்கப் போராடும் தமிழ் மக்கள் அல்ல.....

# நாடும் நடப்பும்




### குடாநாட்டில் சில பாடசாலைகளில்

# மாணவர்களின் அடிப்படை உரிமைகள் அதிபர், ஆசிரியர்களால் பறிக்கப்படுகிறதாம்

### இராணுவத் தளபதி முறைப்பாடு

யாழ்ப்பாணத்திலுள்ள குறிப்பிட்ட சில பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் மாணவர்களின் அடிப்படை மனித உரிமைகளைப் பறித்தெடுக்கும் வகையில் செயற்படுவதால் அவர்களுக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு யாழ்.குடாநாட்டு இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால யாழ. மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

பாடசாலை நாட்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிகழ்வுகளில் மாணவர்களைக் கலந்துகொள்ள வைத்து மாணவர்களின் உரிமைகளைப் பறிக்கின்றனர் என அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்பிய பின்பு அவர்களது பாதுகாப்புப் பற்றிய பொறுப்பு பாடசாலை அதிபர்களிடமும், ஆசிரியர்களிடமும் இருந்தாலும் குடாநாட்டுப் பாடசாலைகளின் அதிபர்களும், ஆசிரியர்களும் மாணவர்களைப் புலிகளின் நிகழ்வுகளில் பங்குபற்ற வைக்கின்றனர்.

கடந்த காலங்களில் நடைபெற்ற புலிகளின் நிகழ்ச்சிகளில் மாணவர்கள் பங்குபற்றிய விபரங்களை அவர் சமர்ப்பித்தார்.

### மாதிரி பாடசாலை அபிவிருத்திக்கு

# ஒவ்வொரு வலயத்திலிருந்தும் மூன்று பாடசர்லைகள் தெரிவாகும்

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் ஒவ்வொரு கல்வி வலயத்திலிருந்தும் மூன்று பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு மாதிரிப் பாடசாலைகளாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக மாகாணக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. வடக்கு-கிழக்கு மாகாணத்தில் சகல கல்வி வலயங்களுக்கும் மாகாணக்கல்வி அமைச்சு அதிகாரிகள் நேரடியாக விஜயம் செய்து, கள ஆயவுகளை நடாத்தி மாதிரிப் பாடசாலைகளைத் தெரிவு செய்துள்ளனர்.

இந்தப் பாடசாலைகளுக்குத் தேவையான பௌதீக வளம், ஆளணி வளம், பாடவிதான அபிவிருத்தி, நலன்புரிச் சேவைகள் ஆகியன வழங்கப்பட்டு மாதிரிப் பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இதன் மூலம் சில முன்னணிப் பாடசாலைகளில் காணப்படும் கல்வித்தரத்தினை ஏனைய பாடசாலைகளுக்கும் விஸ்தரிக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (112)

### வேறு சிறைகளுக்கு

# கருணா குழுவினரை மாற்றக் கோரிக்கை

மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கருணா குழுவினரை வேறு சிறைச்சாலைகளுக்கு மாற்றுமாறு பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் சிறைச்சாலை அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள கருணா குழுவினர் மீது தாக்குதல்கள் தொடுக்கப்படலாம் என்றும், அவ்வாறு தாக்குதல் தொடுக்கப்படும்போது ஏற்படும் உயிராபத்துக்க ளைத் தடுக்குமுகமாகவே அவர்கள் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளதாக மட்டக்களப்பின் சிரேஷ்ட இராணுவ அதிகாரியொருவர் தெரிவித்தார்.

மட்டக்களப்புச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கருணா குழு உறுப்பினரில் ஒருவரான சச்சு மாஸ்டர் என்பவர் அண்மையில் சிறைச்சாலையில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவமே இந்த வேண்டுகோளுக்கான காரணம் எனவும் குறிப்பிட்டார்.

சச்சு மாஸ்டர் மீது தாக்குதலை நடத்தியோர் புலிகள் உறுப்பினர் எனவும், அவரும் மட்டு சிறைச்சாலை யிலேயே தங்கவைக்கப்பட்டிருந்தார் என்றும் இதனாலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# பங்குச் சந்தையின் கிளையொன்று யாழ்ப்பாணத்தில் திறக்கப்படவுள்ளது

கொழும்பு பங்குச் சந்தையின் கிளை ஒன்று எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் யாழ்ப்பாணம் - ஆஸ்பத்திரி வீதியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

கொழும்பிலுள்ள பிரபல்யமான கம்பனிகளின் பங்குகளை குடாநாட்டு மக்களுக்கு விற்கும் முகமாகவே இந்தப் பங்குச் சந்தையின் கிளை திறக்கப்படவுள்ளதாக கொழும்பிலிருந்து வந்த பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் கொழும்பு பங்குச் சந்தை அதிகாரிகள் குழுவினர் - யாழ். பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்து, வணிக முகாமைத்துவ பீட மாணவர்களுடனான கலந்துரையாடல் ஒன்றை நடாத்தியிருந்தனர்.

இந்தக் கலந்துரையாடலில் பங்குச்சந்தை மற்றும் பங்குச் சந்தையின் செயற்பாடுகள், அதனால் பங்குதாரர்கள் பெற்றுக் கொள்ளும் நன்மைகள் என்பவை தொடர்பாகக் கருத்துரைகள் வழங்கப்பட்டன.

# மருதங்கேணியில் மீளக்குடியமர்ந்தவர்களுக்கு இருபத்தையாயிரம் ரூபா கொடுப்பனவு

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. மீளக்குடியமர்ந்த மக்களில் தகுதியானவர்களைத் தெரிவு செய்து 68 குடும்பங்களுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளையின் சிபார்சுடன் யாழ்.செயலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இதேநேரத்தில் 25 ஆயிரம் ரூபா முன்னர் வழங்கப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியான குடும்பங்களுக்கு நிவாரணம் நிறுத்தப்பட்டுவருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (17)

# வலிகாமம் வலயத்துக்கு நிரந்தர கட்டடம் நிதி வசூலிப்பதை பரிசீலனை செய்யவும்!

### தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

வலிகாமம் கல்வி வலயத்துக்கு நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்காக அதிபர்களிடமும், ஆசிரியர்களிடமும் பணம் வசூலிப்பதை மீள் பரிசீலனை செய்யுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் வடக்கு-கிழக்கு மாகாண சபையின் பிரதம செயாளர், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோருடன் முறையாகத் தொடர்புகொண்டு, கட்டடத்துக் குத் தேவைப்படும் நிதி தொடர்பான கோரிக்கையைச் சமர்ப்பிக்கும் பட்சத்தில், நிதி கிடைப்பதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன. எனவே, கட்டடம் அமைப்பதற்காக அதிபர்களோ, ஆசிரியர்களோ நிதி வழங்கத் தேவையில்லை என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, நிதி ஒதுக்கீடு தொடர்பாக வட-கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு - கிழக்கு மாகாண கல்வி கலாசார அமைச்சின் செயலாளர் ஆகியோருடன் சங்கம் தொடர்பை ஏற்படுத்தியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சை– 2004

## உளச்சார்பு

❖

| | | |
|---|---|---|
| 52 | 160 | 28 |
| ? | 160 | 56 |

இடைவெளியிலுள்ள எண் எது?


1) 24 2)102 3)104 4)48 5)66

❖

| | | |
|---|---|---|
| 16 | 80 | 2 |
| 8 | ? | 5 |


இடைவெளியில் காணப்படும் எண் யாது?

1)84 2)96 3)40 4)98 5)76

❖ 


இடைவெளியிலுள்ள எண் எது?


1) 4 2) 5 3) 6 4) 12 5) 18

❖ 


இடைவெளியிலுள்ள எண் என்ன?

1) 63 2) 45 3) 40 4) 35 5) 30

❖ அலுவலர் ஒருவர் அலுவலகத்திற்கு வாகனத்தைச் செலுத்திச் செல்லும் கதியை கீழேயுள்ள வரைபு காட்டுகின்றது.




மேலே இருக்கும் வரைபில் உள்ள தகவலிலிருந்து வர்த்தக நியாயமான முடிவு பின்வருவனவற்றில் யாது?
1) அவர் பயணத்தின்போது தமது காரை அடிக்கடி நிறுத்துகிறார்.
2) அவர் பயணத்தின்போது தமது காரை இருதடவை நிறுத்துகிறார்.
3) அவர் பல வளைவுகளைக் கொண்ட வீதி வழியே வாகனத்தைச் செலுத்திச் செல்கிறார்.
4) அவர் பயணத்தின்போது தமது காரைப் பலதடவைகள் பின்நோக்கிச் செலுத்துகிறார்.
5) அவர் பயணத்தின்போது தமது காரை மாறாக்கதியில் செலுத்துகிறார்.

❖ உற்பத்தி நிறுவனம் ஒன்றில் 1000 வேலையாளர் உள்ளனர். இவர்களுள் 25 சதவீதத்தினர் பெண்கள். இப் பெண்களில் 40 சதவீதத்தினர் இரவு நேர வேலை செய்பவர்கள் வேலையாளர்களின் மொத்த எண்ணிக்கையில் 60 சதவீதத்தினர் இரவு நேர வேலை செய்பவர்கள் எனின், எத்தனை ஆண்கள் இரவு நேரத்தில் வேலை செய்கிறார்கள்.

1) 600 2) 520 3) 500 4) 480 5) 250

❖ ஓர் வாடகைச் சாரதி ஒவ்வொரு **4K.m** உம் அதற்குட்பட்டதுமான தூரத்திற்குச் செல்வதற்கு ரூபா 50 ஐக் கூலியாகப் பெறுகின்றார். **4K.m** தூரதிற்குப் பின்னர் செல்லும் மேலதிகமான ஒவ்வொரு **K.m** தூரத்திற்கோ அதன் ஒரு பகுதிக்கோ ரூபா 10 ஐக் கூலியாகப் பெறுகின்றார். நீர் **8.5K.m** தூரத்திற்கு இந்த வாடைக் காரில் செல்வதாக இருந்தால் எவ்வளவு பணத்தைக் கூலியாகக் கொடுக்க வேண்டும்?

1) 110 2) 95 3) 90 4) 85 5) 100

❖ ராசாவுக்கு கிடைக்கும் தொகையில் இரு மடங்கு ஈசனுக்கும், மும்மடங்கு நேசனுக்கும் கிடைக்கக் கூடியவாறு 54 தோடம்பழங்கள் மூவருக்கும் பகிர்ந்து கொடுக்கப்பட்டால் நேசன எத்தனை தோடம்பழங்கள் பெறுவான்.


1) 20 2) 27 3) 17 4) 22 5) 18

❖ உருவில் இருக்கும் **A** தொடக்கம் **G** வரை பெயரிடப்பட்டுள்ள ஏழு குற்றிகள் ஒவ்வொன்றிலும் வெவ்வேறு நிறத்தில் மை பூச வேண்டியுள்ளது. நிறங்கள் சிவப்பு, பச்சை, மஞ்சள், வெள்ளை, கறுப்பு கபிலம், செவ்வூதா என்பனவாகும்.
- ❑ சிவப்பு மஞ்சளுக்கு மேலே இருத்தல் வேண்டும்.
- ❑ மஞ்சள் பச்சைக்கு மேலே இருத்தல் வேண்டும்.
- ❑ பச்சை வெள்ளைக்கு மேலே இருத்தல் வேண்டும்.

| |
|---|
| **A** |
| **B** |
| **C** |
| **D** |
| **E** |
| **F** |
| **G** |

**E,F** மரக்குற்றிகளில் முறையே பச்சை கறுப்பு நிற மை பூசப்பட்டிருப்பின் பின்வருவனவற்றில் எது திருத்தமானது?
1) குற்றி **B** யில் அல்லது குற்றி **C** யில் சிகப்பு நிறம் பூசப்பட்டிருக்கும்.
2) குற்றி **D** யில் அல்லது குற்றி **G** யில் மஞ்சள் நிறம் பூசப்பட்டிருக்கும்.
3) குற்றி **D** யில் அல்லது குற்றி **G** யில் கபில நிறம் பூசப்பட்டிருக்கலாம்.
4) குற்றி **A** யில் அல்லது குற்றி **G** யில் செவ்வூதா நிறம் பூசப்பட்டிருக்கலாம்.
5) குற்றி **C** யில் அல்லது குற்றி **F** இல் வெள்ளை நிறம் பூசப்பட்டிருக்கலாம்.

❖ குற்றிகளின் தொடர்ச்சியான ஒழுங்குகள் குறித்த ஒரு கோலத்துக்கு ஏற்ப ஏற்படுத்தப் பட்டுள்ளன. உருவிற்கு ஏற்ப முதலாம் ஒழுங்குக்குப் பின்னர் ஒவ்வொரு ஒழுங்கும் முந்திய ஒழுங்கின் கோலத்துக்கு ஒரு நிரை குற்றுக்களைச் சேர்ப்பதன் மூலம் பிறப்பிக்கப்படுகிறது.




இக்கோலம் தொடரும் எனின் எட்டாம் ஒழுங்குக்கு உள்ள குற்றுகளின் எண்ணிக்கை யாது?

1) 20 2) 24 3) 28 4) 32 5) 36


❖ ஒவ்வொரு நாளும் தான் செய்யும் வேலைக்காக ரவி 30 ரூபாவைப் பெறுவதுடன் அதனைச் சிறப்பாகச் செய்யும் போது 50 ரூபாவையும் பெறுகிறான். 10 நாட்கள் வேலை செய்ததின் பின்னர் ரவி 360 ரூபாவைப் பெற்றான். ரவி எத்தனை நாட்கள் தனது வேலையை மிகச் சிறப்பாகச் செய்துள்ளான்?

1) 3 2) 4 3) 5 4) 6 5) 7


❖ ஒரு சதுரத்தின் ஒரு பக்க நீளம் 100% அதிகரிக்கப்பட்டால் அச்சதுரத்தின் பரப்பளவு அதிகரிக்கப்படுவது?

1) 100% இனால் 2) 200% இனால் 3) 300% இனால்
4) 400% இனால் 5) 500% இனால்

❖ கீழே தரப்பட்டுள்ள வடிவம் இரு சமச்சீர் கோடுகளை உடையது.



இவ்வடிவம் வெட்டி எடுக்கப்பட்டு இரு முறிகோடுகளில் ஒன்றின் வழியே மடிக்கப்பட்டு மடிப்பின் ஒரு பக்கத்தில் உள்ள கோடுகள் மற்றைய பக்கத்தில் கோடுகளுடன் செப்பமாக பொருந்தும் என்பதே கருத்தாகும் பின்வரும் வடிவங்களில் எது இரு சமச்சீர்க் கோடுகளை உடையது?




(01) (02) (03) (04) (05)


❖ பின்வரும் கூற்றுக்களிடையே தனிப்பட்ட அபிப்பிராயத்தைக் காட்டுவது யாது?
1) பிட்டும் வடகமும் சுவைமிகு உணவாகும்.
2) இறைச்சியை உண்ணும்போது கொழுப்புச் சத்து கிடைக்கும்.
3) ரொட்டி மாப்பொருள் மிக்க உணவாகும்.
4) எண்ணெய் கொழுப்பு மிக்கது.
5) அப்பிள் பழத்தில் புரதம் உண்டு.


❖ முரளியின் மீன் தொட்டியில் ஒருநாள் காலை எல்லா மீன்களும் இறந்து கிடந்தன. மீன்கள் இறப்பதற்கான நேரடிக் காரணமாகப் பின்வருவனவற்றில் எதனைக் கூற முடியாது?
1) போதிய அளவு ஒட்சிசன் கிடைக்காமை.
2) போதிய அளவு உணவு கிடைக்காமை.
3) நீருடன் ஏதோ ஒரு நஞ்சு சேர்ந்திருந்தமை.
4) மீன் தொட்டியில் நீர் மாசடைந்திருந்தமை
5) பெரிய மீன்கள் சிறு மீன்களைக் கொன்றமை

❖ கண்ணன் **A** யிலிருந்து 14**km** தூரத்தில் உள்ள **B** யிற்கு நடக்கத் தொடங்கி ஒரு மணித்தியாலத்திற்குப் பின்னர் சேகர் அதே வீதி வழியே **B** யிலிருந்து **A** யிற்கு நடக்கத் தொடங்கினார். கண்ணனைச் சந்தித்த போது சேகர் எத்தனை **km** நடந்துள்ளார்.

1) 10**km** 2) 8**km** 3) 6**km** 4) 4**km** 5) 2**km**

❖ 







இடைவெளியில் வரும் எண் எது?

1) 17 2) 45 3) 31 4) 28

(தொடரும்)

## நேற்றைய மாதிரி வினாத்தாள் விடைகள்

1) யார்க்கம்
2) ஈரல்
3) முயற்சி
4) **CQ, AR**
5) **BS, CS**
6) இவை தலைநகரங்கள்
7) இவை நீளத்தை அளக்கும் அலகுகள்
8) இவை நாணயங்கள்
9) குடிவரவு - குடியகல்வு
10) செம்மறி - கம்பளி
11) 45
12) 32
13) 140
14) **UXWV**
15) 30
16) 16
17) 68
18) 60
19) 12
20) 4
21) **D**
22) **E**
23) **A**
24) **A**
25) **A**
26) **D**
27) 16
28) எனது பயணம் நாம் நினைப்பதைக் காட்டிலும் தாமதமாகும்.
29) **QPSR**
30) **SPRQ**
31) **JMIKFG**
32) **F, G**
33) இல்லை
34) ஆம்
35) வகுப்புக்கு மாணவர் செல்லல்
36) ராஜா சனிக்கிழமைகளில் அலுவலகத்திற்குச் செல்வதில்லை.
37) **V**
38) **Q**
39) நான் நேற்று சடுதியாக நோயுற்றேன். நான் முடிந்தளவு இரவு வீட்டிலன்றி வெளியே சாப்பிட்டேன். அதுவே எனது நோய்க்குக் காரணமாக இருக்கலாம்.
40) 11
41) டெங்கு
42) டெங்கு அதிகரிக்கும் அதேவேளை ஈரல் நோய் குறைகின்றது.
43) குடும்பத்திட்ட முறைகள் வெற்றியீட்டுவதற்கு பிரதான காரணி எழுத்தறிவு வீதமாகும்.
44) **TIXE**
45) 
46) 
47) 
48) 
49) 
50) 48

# சவுதி தலைநகரில் நடந்த தாக்குதலில் இரண்டு ஆயுததாரிகள் பலி; மூவர் கைது!



(றியாட்)

சவுதிப்படையினர் தலைநகர் றியாட்டில் நடத்திய தாக்குதலில் இரண்டு ஆயுததாரிகள் சுட்டுக்கொல்லப்பட்டதுடன் முவர் படுகாயமடைந்ததாக சவுதி அதிகாரிகள் தெரிவித்தனர்.

இத்தாக்குதல் நடவடிக்கை சவுதி அரசா, பாத்தின் மாவட்டத்தில் இடம்பெற்றது. இந்தத்தாக்குதலின் பின்னர் அல்கொய்டா சந்தேக நபர்கள் தங்கியிருந்ததாகக் கூறப்படும் வீட்டின் உரிமையாளர்களும் கைதுசெயயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆயுததாரிகள் எனச் சந்தேகிக்கப்படுவோர் தங்கியிருந்த வீட்டினருகே, படையினர் விசாரணைகளை நடத்திய வேளையிலேயே இந்தத் தாக்குதற் சம்பவம் இடம்பெற்றதாக சவுதியின் உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்தது.

படையினர் விசாரணை நடத்தியவேளை, வீட்டிலிருந்த ஆயுதாரிகள் கிரனைட் மற்றும் றொக்கட்டுக்கள் மூலம் தாக்குதல் நடத்தியதாகவும், படையினர் திருப்பித் தாக்குதல் நடத்தியதாகவும் இதன்போது இரண்டு ஆயுததாரிகள் கொல்லப்பட்டும். மூவர் படுகாயமடைந்ததாகவும் அமைச்சு தெரிவித்தது.

காயமடைந்தவர்களில் கைதுசெய்யப்பட்டவர் தேடப்பட்டுவந்த, சாலே அல் அவ்பி எனவும், மற்றையவர்கள் அவரது மனைவியும் மூன்று பிள்ளைகள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலில் மூன்று பொலிஸாரும் படுகாயமடைந்தனர். ஆயுததாரிகளில் இரண்டாவதுகுழு, படையினர் மீது தாக்குதலை நடத்திவிட்டுப் படையினர் செல்வதற்கு முன் சம்பவ இடத்திலிருந்து தப்பிச்சென்றுவிட்டதாகவும் சவுதி உள்துறை அமைச்சு தெரிவித்தது.

# நீரும் நெருப்பும் மோதல்



ஜப்பானிலுள்ள டோக்கியோ நகரில் டிஸ்னி உலகம் போல டிஸ்னி கடல் அமைக்கப்பட்டுள்ளது. இந்த டிஸ்னி கடலில் பிரமாண்டமான நீரூற்றும், கொளுந்து விட்டெரியும் தீச்சுவாலையும் அமைக்கப்பட்டுள்ளது. நீரும் நெருப்பும் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொள்வது போன்ற அமைப்பை உருவாக்கியுள்ளனர். கடலில் தீச்சுவாலை உயரே கிளம்ப, அதை நீரூற்றில் இருந்து தண்ணீர் மேலே கிளம்பி அணைக்கிறது. தொடர்ச்சியாக நடக்கும் இந்த நிகழ்ச்சியை சுற்றுலாப் பயணிகள் படகுகளில் இருந்தபடியே பார்க்கலாம்.

# மகனை கொலைசெய்த தாயாருக்கு 30 வருட சிறைத்தண்டனை விதிப்பு!

## இத்தாலியில் சம்பவம்

(ரோம்)

தனது மூன்று வயது மகனைக் கொலைசெய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில், 33 வயதான இத்தாலியத் தாயொருவருக்கு 30 வருட சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், தனது மூன்றுவயது மகனைத் தான் கொலை செய்யவில்லையென தாயார் தொடர்ந்து மறுத்து வருகின்றார்.

இந்தச் சம்பவம் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் இடம்பெற்றது. இத்தாலியில் இவ்வாறான தொரு கொலைச்சம்பவம் இடம்பெற்றது இதுவே முதற்தடவையாகும்.

தனது மகன் வீட்டிற்குள் இருந்த வேளை தான் வெளியே சென்று விட்டு மீளவும் வீட்டிற்குள் வந்த போது மகன் இறந்து கிடந்ததாக தாயார் தெரிவித்தார்.

இதேவேளை, மகனின் கொலைக்குப் பின்னர் தாயார் அணிந்திருந்ததாகக் கூறப்படும் உடையில் இரத்தக்கறை படிந்திருந்ததை பொலிஸார் கண்டுபிடித்தனர். ஆனால், மகனின் கொலையின்போது தாயார் இந்த உடையை அணிந்திருந்தாரா என்பது இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை.

இந்தச் சம்பவம் நடைபெற்ற வேளை இருந்ததான ஆவணங்களையும் பொலிஸார் அழித்து விட்டதாகக் கூறப்படுகிறது

மூன்று வயதுக் குழந்தை இறந்த பின்னரும், தாயாரான அன்னா மறியா மூன்றாவது குழந்தையையும் பெற்றெடுத்துள்ளார்.

இதேவேளை, இந்தக்கொலைச் சம்பவம் தொடர்பாக அன்னா மறியா இத்தாலியின் அல்பைன் நகரத்திலுள்ள நீதிமன்றில் தனியாக வைத்து விசாரணைக்கு உட்படுத்தபட்டார்.

அன்னா மறியாவிற்கு வழங்கப்பட்ட தீர்ப்பையிட்டு தான் மிகவும் அதிர்ச்சியடைந்ததாகவும், இதற்கெதிராகத் தான் மேன்முறையீடு செய்யவுள்ளதாகவும் அவரது சட்டத்தரணி பிரான்சூனி தெரிவித்தார்.

உலக நோக்கு

# தடுப்புச்சுவர் குறித்த ஐ.நாவின் தீர்மானத்தை இஸ்ரேல் நிராகரித்தது!



(டெல்அவில்)

மேற்குக்கரைப் பகுதியில் இஸ்ரேல் அமைத்துவரும் தடுப்புச்சுவரை அகற்றுமாறு சர்வதேச நீதிமன்று விடுத்த தீர்ப்பைச் செயற்படுத்துமாறு, ஐ.நாவின் பொதுச்சபையில் பெரும்பாலான நாடுகள் நேற்று வாக்களித்திருந்ததை இஸ்ரேல் நிராகரித்துள்ளது.

இது தொடர்பாக பிரதமர் ஏரியல் ஷரோனின் சிரேஷ்ட ஆலோசகர் தெரிவிக்கையில் -

மேற்குக்கரையில் அமைக்கப்பட்டு வரும் பாதுகாப்புச்சுவர் தொடர்ந்தும் அமைக்கப்படுமெனத் தெரிவித்தார்.

இந்தத தடுப்புச்சுவரை அகற்றுவதற்கு ஆதரவாக ஐ.நாவின் பொதுச்சபையில் 150 நாடுகளும், எதிராக ஆறு நாடுகளும், வாக்களிப்பில் பத்து நாடுகள் கலந்துகொள்ளாமல் இருந்தன.

இந்த 150 நாடுகளின் எதிராக வாக்குகள் இஸ்ரேல் அரசாங்கத்திற்கு அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளதாக பி.பி.ஸியின் சுசானா பிறைஸ் தெரிவித்தார்.

பாதுகாப்புச்சுவர் அமைக்கும் பணியை இஸ்ரேல் ஒருபோதும் நிறுத்தமாட்டாது. இது இஸ்ரேலின் பாதுகாப்பிற்கு மிகவும் முக்கியமானதென ஆலோசகர் ரானான் இஸின்-றொய்ட்டர் செய்தி நிறுவனத்திற்குத் தெரிவித்தார்.

இஸ்ரேலின் தற்போதைய பாதுகாப்பிற்கு உத்தரவாதமாக இந்த தடுப்புசுவரைவிட வேறு எந்த மாற்று வழியும் இல்லையென ஷரோனின் மற்றொரு ஆலோசகரான் டோரி கோல்ட் தெரிவித்தார்.

பொதுமக்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் இந்தத் தடுப்புச்சுவரை பல நாடுகள் எதிர்த்துள்ளதாக ஐ.நாவுக்கான இஸ்ரேல் தூதுவர் கில்லறிமான் தெரிவித்தார்.

அத்துடன், இந்தத் திட்டத்திற்கு எதிராக வாக்களித்த ஆறு நாடுகளுக்கும் தனது நன்றியைத் தெரிவிப்பதாகவும் அவர் கூறினார்.

ஐ.நாவின் பொதுச்சபையிலுள்ள 191 நாடுகளும் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு எந்தவொரு நாட்டையும் கட்டாயப்படுத்த முடியாது.

இந்தத்திட்டம் ஐ.நாவின் பாதுகாப்புச்சபைக்குச் செல்லவுள்ளது. இதனை அமெரிக்கா தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி ரத்துச் செய்யலாமென தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் திட்டமானது ஒரு சமநிலையற்றதென இஸ்ரேலுக்கான அமெரிககப் பிரதித் தூதுவர் ஜேம்ஸ் கன்னிங்காம் தெரிவித்தார்.

பொதுச்சபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை, பாதுகாப்புச்சபையில் சமர்ப்பிப்பதனை, நவம்பரில் நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்வரையாவது ஒத்திவைக்க வேண்டுமென பலஸ்தீன அதிகாரிகள் கேட்டுள்ளனர்.

## டர்பூர் பிரதேச மக்களின் கொலை

# ஆயுததாரிகளுக்கு சூடான் அரசு உதவியளித்த ஆதாரங்கள் உள்ளது

## மனித உரிமை ஆணைக்குழு தெரிவிப்பு

டர்பூர் பிரதேசத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் ஆயுததரிகளால் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு சூடான் அரசாங்கம் பின்புலமாக இருந்ததற்கான ஆதாரங்கள் இருப்பதாக மனித உரிமைகள் குழுவொன்று தெரிவித்துள்ளது.

நியூயோர்க்கைத் தலைமையகமாகக் கொண்டியங்கும் இந்த மனித உரிமை ஆணைக்குழு மேலும் தெரிவித்ததாவது -

சூடான் அரசின் ஆவணங்களின் தகவல்களின்படி அரசாங்க அதிகாரிகள் ஜான்ஜாவீட் என்ற ஆயுதக்குழுவிற்கு ஆட்களைச் சேர்ப்பதற்கு உதவியதுடன், ஆயுத விநியோகத்தையும் செய்துள்ளனர்.

ஆனால், ஆயுததாரிகளுடன் தமக்கு எதுவித தொடர்புமில்லையென சூடான் அரசாங்கம் தெரிவித்தது. டர்பூர் பிரதேசத்தில் பெண்கள், ஆயுததாரிகளால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்படுவதாக பரவலாக வெளிவந்த செய்தியை அடுத்து, அந்தப் பகுதிக்கு 6 ஆயிரம் பொலிஸார் அனுப்பப்பட்டு பாதுகாப்பளிக்கப்பட்டு வருவதாகவும் சூடான் அரசு தெரிவித்தது.



ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் உணவின்றியும், தொற்று நோய்களாலும் சாவின் விழிம்பில் உள்ளதாக சர்வதேச உதவி அமைப்புக்கள் எச்சரித்துள்ளன.

இவ்வாறு கஷ்டப்படும் மக்களுக்கான உதவிகளை சர்வதேச அமைப்புக்கள் உடனடியாக வழங்கவேண்டுமென பிரிட்டனின் உதவி வழங்கும் அமைப்பு கோரியுள்ளது.

# பனிக்கட்டியுடன் விளையாடும் குரங்கு



சீனாவில் இப்போது கடும் வெப்பம் நிலவுகிறது. உயிரியல் பூங்காவில் உள்ள விலங்குகளால் இந்த வெப்பத்தைத் தாங்க முடியவில்லை.

தெற்கு சீனாவிலுள்ள பான்யு நகரில் உள்ள உயிரியற் பூங்காவில் வெப்பத்தில் இருந்து தப்ப பனிக்கட்டிகளைக்கொண்டு வந்து கொட்டிய வண்ணம் இருக்கிறார்கள். அபூர்வ ஒராங்குதான் வகை குரங்கு ஒரு பனிக்கட்டி மீது தன் கை, கால்களைத் தேய்த்து உடலைக் குளிர்வித்து அதன் மீது ஏறி நின்றும் விளையாடுகிறது.

# அமெரிக்க அரசின் அனுமதியுடனேயே ஆப்கானில் சிறைச்சாலை நடத்தினாராம்

## கைதுசெய்யப்பட்ட அமெரிக்கர் தெரிவிப்பு

ஆப்கானில் தனியாகச் சிறைச்சாலை நடத்திவந்த மூன்று அமெரிக்கர்கள் மற்றும் நான்கு ஆப்கான் நாட்டவர்கள் சர்வதேச சமாதானப் படையினரால் அண்மையில் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் பிரதானமானவரான அமெரிக்க நாட்டைசேர்ந்த ஜொனதன் கே இடேமா, தான் அமெரிக்க பாதுகாப்புச் செயலகத்தின் அனுமதியுடனேயே இந்தத் தனியார் சிறைச்சாலையை நடத்திவந்ததாகத் தெரிவித்தார்.

இவ்வாறு அமெரிக்கப் பாதுகாப்புச் செயலகத்துடன் நான் தொடர்பு வைத்திருந்தபோதும், அமெரிக்கா என்னைக் கைவிட்டுவிட்டதாக அவர் தெரிவித்தார்.

ஆனால், கைதுசெய்யப்பட்ட அமெரிக்கர்கள் மூவரும் வெளியாட்களினால் கூலிக்கு அமர்த்தப்பட்டவர்கள் எனவும், அமெரிக்காவுக்கும் இவர்களுக்குமிடையில் எவ்விதத் தொடர்புமில்லையெனவும் அமெரிக்கப் பாதுகாப்பு செயலகம் தெரிவித்துள்ளது.

ஜொனதன் கே.இடேமா மேலும் தெரிவிக்கையில் - பயங்கரவாதிகளின் பல தாக்குதல்கள் நடைபெறுவதனை நான் தடுத்துள்ளேன். அத்துடன் ஈ.மெயில் தொலைத்தொடர்பு மற்றம் பக்ஸ் மூலம் ரம்ஸ்பீல்டின் அலுவலக அதிகாரிகள் மற்றும் பென்ரகனின் சிரேஷ்ட அதிகாரிகளுடனும் தொடர்பு வைத்திருந்தேன் எனத் தெரிவித்தார்.

இந்த மூன்று அமெரிக்கர் மற்றும் நான்கு ஆப்கான் நாட்டவர்கள் தனியார் வீடு ஒன்றில் எட்டு ஆப்கான் நாடடவர்களைச் சிறைக்கைதிகளாக வைத்திருந்தவேளை கைது செய்யப்பட்டனர்.

இந்த மூன்று அமெரிக்கர்களும் அமெரிக்க இராணுவச் சீருடையுடன் திரிந்து தம்மை முட்டாள்களாக்கிவிட்டதாக சர்வதேச சமாதானப் படையினர் தெரிவத்தனர்.

இதேவேளை இந்த அமெரிக்கர்களின் சிறையில் இருந்த எட்டு ஆப்கானியரும் விடுவிக்கப்பட்டதாக ஆப்கான் அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால், இவர்களில் ஐவர் இன்னமும் வரவில்லையென ஆப்கானின் உள்ளூர்வாசிகள் தெரிவித்தனர்.

அல்கொய்டாவை ஒழிப்பதாகக் கூறி ஆப்கானில் அமெரிக்கப் படையினர் மேற்கொள்ளும் நடவடிக்கையால் தேவையற்ற விதத்தில் வெளிநாட்டவர்கள் ஆப்கானுக்குள் பிரவேசிப்பதாக செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## வவுனியா கல்வியியல் கல்லூரி

# சிங்கள மாணவர்களின் பகிஷ்கரிப்பு தொடர்கிறது

வவுனியா கல்வியியற் கல்லூரியில் நேற்று நான்காவது நாளாகவும் சிங்கள மாணவர்கள் தமது விரிவுரைகளைத் தொடர்ந்தும் பகிஷ்கரித்தனர்.

நேற்றுமுன்தினம் கொழும்பிலிருந்து கல்வியியல் கல்லூரி ஆணையகத்தின் இரண்டு பெண் உயரதிகாரிகள் வந்து மாணவர்கள் மற்றும் நிர்வாகத்தினர் உட்பட அனைத்துத் தரப்பினருடனும் இது தொடர்பாகக் கலந்துரையாடிய போதும், எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை.

தமது பாதுகாப்புத் தொடர்பாகக் கல்வியியற் கல்லூரியின் நிர்வாகத்தினர் எழுத்துமூலம் உறுதி வழங்க வேண்டுமெனவும், இல்லையெனில் கல்வியியற் கல்லூரியை மூடுமாறும் சிங்கள மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆனால், சிங்கள மாணவன் தாக்கப்பட்டதற்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லையெனவும், இதனைச் சாட்டாக வைத்துக்கொண்டு கல்வியியற் கல்லூரியை மூடுவதற்குத் தாம் அனுமதிக்கப்போவதில்லையெனவும தமிழ் மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த மாணவர்கள் மற்றும் அனைத்து தரப்பு அதிகாரிகளுடன் கொழும்பிலிருந்துவந்த பெண் உயர் அதிகாரிகள் நேற்றும் பேச்சுக்களை நடாத்தியபோதும் தீர்வுகாணப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது. (03)

## 4 கோரிக்கைகளை முன்வைத்து கௌதாரிமுனையில் பேரணி!

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பூநகரி கௌதாரிமுனை மக்களால் நேற்றுக்காலை ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

நான்கு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்தே இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டது.

கேரதீவு - சங்குப்பிட்டிப் பாதை திறக்கப்படவேண்டும்.

கௌதாரிமுனை - கல்முனை வீதி புனரமைக்கப்படவேண்டும்.

கௌதாரிமுனையில் பனை வளம் அழிக்கப்படுகின்றமை நிறுத்தப்படவேண்டும்.

கௌதாரிமுனை கடற் பரப்பில் வெளியிடங்களிலிருந்து குறிப்பாக, இந்திய மீனவர்களின் மீன்பிடி நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தே இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டது.

கௌதாரிமுனையிலிருந்து பூநகரிப் பிரதேச செயலகம் நோக்கி இந்தப் பேரணி இடம்பெற்றது.

கௌதாரிமுனை கிராம அபிவிருத்திக்குழுத் தலைவர் அப்பாத்துரை தலைமையில் நடைபெற்ற இந்தப் பேரணியின் முடிவில், பூநகரிப் பிரதேச செயலரிடம் மனு ஒன்று கையளிக்கப்பட்டது.

இந்தப் பேரணியில் பெருந்தொகையான மக்கள்கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## 1500 தபால் ஊழியர்கள் விரைவில் ஆட்சேர்ப்பு!

(கொழும்பு)

நாடெங்கிலும் உள்ள தபால் சேவை வெற்றிடங்களை நிரப்ப அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் என்.ஜெயரத்ன தெரிவித்தார்.

தபால் சேவகர்களாக ஆயிரத்து ஐநூறுபேர் வரையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். இவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கடந்த அரசாங்கம் தபால் சேவை ஊழியர்கள் நியமனத்தைச் சில கொள்கைகளின் அடிப்படையில் நிறுத்தியிருந்ததால் தபால் திணைக்களம் பெரும் சிரமங்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளது.

இதனையடுத்தே அமைச்சரவையின் தீர்மானத்தின்படி இந்தப் புதிய நியமனங்கள் விரைவில் வழங்கப்படவிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதனைத் தபால் மா அதிபர் எஸ்.சேனாதீரவும் உறுதிசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## கந்தப்பொல சம்பவம் எதிர்பாராமல் நடந்தது

### நீதிமன்றம் தீர்ப்பு!

(கொழும்பு)

நுவரெலியா கந்தப் பொலவில் பொதுமக்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகம் எதிர்பாராத ஒரு சம்பவமே என நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி கந்தப் பொலவில் தமிழ், சிங்கள மக்களிடையே ஏற்பட்ட கலவரத்தை கட்டுப்படுத்துவதற்காக பொலிஸார் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். இதன்போதே இரு தமிழ் இளைஞர்கள் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக 12 பொலிஸாரும், 5 இராணுவத்தினரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி சம்பவம் குறித்து நுவரெலியா நீதிமன்றத்தில் ஐந்து தவணை வழக்கு நடைபெற்றது. நேற்று நீதவான் தனது தீர்ப்பை வழங்கினார்.

கூட்டத்தினரை கட்டுப்படுத்துவதற்காகவே அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதெனவும் இந்தச் சம்பவம் ஒரு சாதாரண நிகழ்வே என்றும் நீதிவான் சமன் அபயக்கோன் தீர்ப்பளித்தார். (01)

### தேங்கிக் கிடந்த...

கள் மூலம் கொழும்புக்குக் கொணடு செல்லப்பட்டுள்ளன.

அவை இந்தவாரம் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்பட்டு பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளன. இந்தப் பொதிகளில் வெளிநாடுகளிலிருந்து உறவினர்களுக்கு அனுப்பப்பட்ட பொருட்கள் மற்றும் அடையாள அட்டைகள் எனப் பலப் பொருட்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வன்னிப்பகுதியிலுள்ள பொதுமக்களுக்குச் சொந்தமான பொதிகள் வவுனியா பிரதம தபாலகத்தில் வைத்து அந்த மக்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### உதவி வழங்கும்....

மீண்டும் ஆரம்பிக்கப்படாவிட்டால் உதவி வழங்கப்படாது என்று வெளிநாட்டு உதவி வழங்கும் குழுக்கள் திடமான ஒரு நிலைப்பாட்டில் இருப்பது தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான விடயமாகும்.

இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகள் தற்போதுள்ள நிலையைப் புரிந்துகொண்டு, நிலைப்பாட்டை மாற்றித் தமது உதவிகளை உடனடியாக வழங்கி உதவவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)

### ஈ.பி.டி.பியின் அம்பாறை...

பிரயோகம் மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

கல்முனையைப் பிறப்பிடமாகக் கொண்ட 32 வயதுடைய இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார்.

சம்பவம் நடந்த பகுதிக்கு அண்மையில் இலங்கைப் பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருந்ததாகவும், இந்தப் பகுதியில் பெருமளவான பொதுமக்கள் நின்றிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

*இவரது சடலம் தற்போது அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் விசாரணைக்காகவும், பிரேத பரிசோதனைக்காகவும் வைக்கப்பட்டுள்ளது.*

இதேவேளை, இவருக்கு முன்னர் ஆலையடி வேம்பு பிரதேசசபையின் தலைவராக இருந்த ஈ.பி.டி.பி முக்கியஸ்தரும் ஏற்கனவே சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சுட்டுக் கொல்லப்பட்ட கமலன், ஈ.பி.டி.பி தலைவர் டக்ளஸ் தேவானந்தாவின் முக்கியசகா என்றும், அம்பாறையின் தற்போதைய ஈ.பி.டி.பி அமைப்பாளர் சங்கரின் முக்கிய செயற்பாட்டாளரெனவும் தெரிவிக்கப்படுகின்றது. (07)

## விபத்தில் சிக்கி படுகாயம்

(யாழ்ப்பாணம்)

ஆனைப்பந்திச் சந்திப் பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற விபத்தில் ஆண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

மோட்டார் சைக்கிளும் மினிபஸ்ஸும் மோதிக்கொண்டதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் படுகாயமடைந்தார்.

நேற்று இரவு 11 மணியளவில் இவ் விபத்து இடம்பெற்றது. விபத்தினால், தலையில் படுகாயமடைந்த இந்த நபர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார் எனத் தெரியவருகிறது.

### ஜூலை கலவரங்க...

மாதமாக அனுஷ்டிப்போம்.

குடிமக்களுக்கு பாதுகாப்பளிக்க வேண்டிய அரசே முன்னின்று குடிமக்கள் மீது வன்முறையை பிரயோகித்த கேவலத்தை நாம் அனுபவித்திருக்கிறோம். அந்த ஆடிக்கலவரம் ஆழமான பதிவினையும், பிளவினையும் ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்ப்பெண்கள் பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர். சிறுவர் சிறுமிகள் அடித்துக் கொல்லப்பட்டனர். எமது உறவுகள் வகை தொகையின்றி அக்கினிக்குள் இரையாக்கப்பட்டனர் என்பது எமது நெஞ்சங்களில் இன்னும் நீறுபூத்த நெருப்பாக எரிந்துகொண்டிருக்கிறது.

என்றுமே ஏற்பட்டிராத உயிர் இழப்பு உடமைகள் இழப்பு தமிழ் மக்களுக்கு ஏற்பட்டபோதும் 21 வருட மாகியும் இதற்காக அரசு எவ்விதமான நட்டஈடும் கொடுக்கவில்லை.

மிகவும் சோகமும், துயரமும் நிறைந்த ஜூலைக்கலவரம் ஒன்றை மட்டும் தமிழர்களுக்கு தெளிவாக தெரிவித்தது.

தமிழர்கள் தம் தலைவிதியை தாமே தீர்மானிக்க உரித்துடையவர்கள் என்ற உண்மை நிலையை உறுதிபட உரைத்தது.

தென்னிலங்கையில் மட்டும் உயிரிழப்புடன் நின்றுவிடவில்லை. வெலிக்கடை மகசீன் சிறைச்சாலையில் பாதுகாப்புடன் சிறைவைக்கப்பட்டிருந்த கைதிகள் கோரமாக கொல்லப்பட்டனர். தலை வேறாகவும், கண்கள் பிடுங்கியும் உடல் உறுப்புக்களை வெட்டியும் கோரமாக கொலை செய்யப்பட்ட செய்தி வெளியானபோது தமிழர்கள் இரத்தக் கண்ணீர் வடித்தார்கள்.

மனிதநேயம் மிக்கவர்களால் கறுப்பு ஜூலை என விழித்துக் கூறப்படுகின்ற ஜூலை மாதத்தை தமிழர்கள் உதாசீனப்படுத்த முடியாது.

எதிர்வரும் யூலை 25 ஐ தமிழ் மக்கள் துக்க நாளாக கடைப்பிடிப்பதுடன் வழமையாக தங்கள் அன்றாட கடமைகளை இடைநிறுத்தி முழுமையான துக்க நாளாக கருதி தங்கள் வீடுகள் வர்த்தக நிறுவனங்கள் திணைக்களங்கள் அனைத்திலும் கறுப்புக்கொடிகளை பறக்கவிட்டு எமது குமுறல்களை உலகிற்கு வெளிப்படுத்தும் அன்றைய தினம் போக்குவரத்து சேவைகளை முற்றாக நிறுத்தி தேனீர்ச்சாலைகள், சந்தைகள் போன்றவை இயங்குவதை நிறுத்தி பூரண ஸ்தம்பித நிலையில் இருக்குமாறு யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## டென்மார்க் மனித உரிமைக்குழு யாழ்ப்பாணத்துக்கு விஜயம்!

டென்மார்க் நாட்டு மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் குழு ஒன்று இன்று யாழ்ப்பாணத்துக்கு வருகைதரவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனவர்கள் தொடர்பாக ஆராயவே இவர்கள் இங்கு வருகை தருகின்றனர்.

இவர்கள் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம், இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள், இராணுவத்தினர், யாழ். மாவட்ட நீதிபதிகள் உள்ளிட்ட பலரையும் சந்திக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## வவுனியா வளாக மாணவர்களால் முதல்வர், ஊழியர்கள் தடுத்து வைப்பு

(வவுனியா)

யாழ்.பல்கலைக்கழகத்தின் - வவுனியா வளாகத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் தமக்கு முன்னர் உறுதியளித்தபடி தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை எனத் தெரிவித்து வவுனியா வளாக முதல்வர் மற்றும் கல்விசாரா ஊழியர்களை நேற்றுக் காலை முதல் மாலை 3.30 மணிவரை தடுத்துவைத்தனர்.

இதனையடுத்து இவர்களுக்கு வழங்கப்பட்ட உறுதிமொழியின்படி கலாசார மண்டபத்தை எதிர்வரும் திங்கட்கிழமை கையளிப்பதாக உறுதிமொழி வழங்கப்பட்டதையடுத்து, தடுத்துவைக்கப்பட்டவர்களை மாணவர்கள் செல்ல அனுமதித்தனர்.

இதேவேளை மாணவர்கள் தம்மைத் தடுத்துவைத்தமையை எதிர்த்து கல்விசாரா ஊழியர்கள் காலவரையறையின்றி வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர். (03)

### சமாதான...

நடாத்தவுள்ளதுடன், அடுத்தகட்டப் பேச்சுக்களை ஆரம்பிப்பது குறித்து முக்கிய விபரங்களை வெளியிடவிருப்பதாக ஊடகங்கள் தெரிவித்துள்ள நிலையில், இந்தச் சந்திப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

### அதிகரிக்கும் போர்...

ஹொவ்டே ஏற்கனவே அரசுத் தரப்புடன் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

முப்படைத் தளபதிகளையும் சந்தித்த புறூஃஹொவ்டே யுத்த நிறுத்த மீறல்களைக் கட்டுப்படுத்தி, போர்நிறுத்த உடன்பாட்டை சுமுகமாக அமுல் படுத்துவது குறித்துப் பேச்சு நடத்தினார்.

அந்தப் பேச்சுக்களின் தொடர்ச்சியாகவே புறூஃஹொவ்டே விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை இன்று சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

இதனிடையில், இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவின் மாவட்ட பிரதிநிதிகளுக்கும், கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைமையகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் செயற்படும் மாவட்டங்களில் போர்நிறுத்த உடன்படிக்கையை மேலும் பலப்படுத்தி, யுத்தநிறுத்த மீறல்களைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் குறித்து ஆராயப்பட்டது.

கண்காணிப்புக் குழுத்தலைவர் ட்ரொன் புறூஹொவ்டே, பிரதித் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் மற்றும் வடக்கு, கிழக்கில் - யாழ்ப்பாணம், வவுனியா, வன்னி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்கள் அனைத்திலும் பணியாற்றும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகளும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இதேவேளை -

வடக்கு, கிழக்கில் நிலைமைகளால் போர்நிறுத்த உடன்படிக்கையை அமுல்படுத்துவதில் கண்காணிப்புக் குழுவினர் பெரும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருவதாகவும், இதனால், அவர்கள் தங்கள் பணிகள் குறித்து மீள்பரி சீலனை செய்யும் நிலையில் இருப்பதாகவும் வெளியாகியுள்ள செய்திகளை கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் அதிகாரி லீசா பொன்னபேர்க் மறுத்துள்ளார்.

### தமிழ் மக்களை...

தமிழ் மக்களின் தேசிய ஒற்றுமையைக் குலைக்கும் வகையில் செயற்படும் தீயசக்திகளை எதிர்கொள்ள தமிழீழ விடுதலைப்புலிகள் தயாராக உள்ளார்கள். இன்று தமிழர் நிமிர்ந்து நிற்பதற்கு புலிகளின் தியாகமே காரணம். இது அனைவரும் அறிந்தது. தமிழ் மக்களின் முழு ஆதரவும் எமக்கு இருப்பதால் நாம் என்றும் தலை நிமிர்ந்து எமது மக்களுக்காகப் போராடுவோம்.

கடந்த இரண்டரை வருடம் நாட்டில் நிலவிவரும் அமைதி நிலையை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த எண்ணியுள்ள சில தீய சக்திகள் குறிப்பாக சிங்கள இராணுவம் தமிழ் தேசவிரோத சக்திகளும் தமிழ் மக்கள் மத்தியில் பல்வேறு பிளவுகளையும் ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். அந்தத் தீய சகதிகளின் முயற்சிகளுக்கு எமது மக்கள் இடமளிக்கக்கூடாது. கடந்த காலப் போராட்டங்களின் போது இந்த மன்னார் மாவட்டத்தினைக் காப்பதற்காக எமது பல போராளிகளை இந்த மண்ணில் இழந்திருக்கிறோம். அந்தத் தியாகங்கள் என்றும் வீண் போகக் கூடாது எனவும் அவர் அங்கு மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் விஸ்வலிங்கம், தமிழீழ விடுதலைப் புலிகளின் மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எஸ்.இனியவன், மன்னார் மாவட்ட நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் யோசப் மற்றும் மும்மதங்களைச் சேர்ந்த பல முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர். (ப)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 22.07.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.